# கெயிஸாங் தளம் விரைவில் வீழ்ந்துவிடும்

Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 7
தேசிய தினசரி

[illegible] மாசி 5 ஜுல்ஹஜ் 17 சனிக்கிழமை (17-2-68)

## வடவியட்நாம் அறிவிப்பு

லண்டன், பெப். 16

தென் வியட்நாமிலுள்ள அமெரிக்காவின் முக்கிய தகவல் தளமான கெய்-ஸாங் மீது வட வியட்நாம் துருப்புகள் கடும் தாக்குதல்கள் நடாத்திக்கொண்டிருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளன.

நேற்று அமெரிக்க குண்டு விமானம் நடாத்திய தாக்குதலில் 42 சிவிலியன்கள் தவறுதலாகக் கொல்லப்பட்டுவிட்டதாக அமெரிக்க ராணுவ உயர் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

கெய்-ஸாங் தளத்தில் நடாத்தும் தாக்குதலில் விரைவில் கெய்-ஸாங் தமது வசமாகி விடுமென்று வட வியட்நாம் இன்று அறிவித்தது.

### யுதாண்ட் திரும்பினார்

புதுடில்லி, பாரிஸ் ஆகிய முக்கிய இடங்களுக்குச் சென்று உலகத் தலைவர்கள் பலருடனும் வியட்நாம் யுத்தம் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு யுதாண்ட் நியூயோர்க்திரும்பினார். யுதாண்ட் ஐ. நா. வின் தலைமைப் பிரதிநிதி திரு கோல்ட் பார்க்கைச் சந்தித்து தாம் சந்தித்து உரையாடிய தலைவர்களின்

(8-ம் பக்கம் பார்க்க)

# நாளை நடைபெறும் கல்முனை இடைத் தேர்தல்

## பிரசாரக் கூட்டங்கள் நேற்றுடன் முடிவடைந்தன

யாழ்ப்பாணம், சனி

நாட்டின் கவனத்தை தன்பக்கம் ஈர்த்துள்ள கல்முனை இடைத்தேர்தல் நாளை நடைபெறவிருக்கிறது. பிரதமர் டட்லி சேனநாயகா உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு போட்டியிடும் அபேட்சகர்களை ஆதரித்து நடாத்தப் பட்ட பிரசாரக்கூட்டங்கள் நேற்றுடன் முடிவடைந்தன.

கல்முனை இடைத் தேர்தலில், தமிழரசுக்கட்சி சார்பில் ஜனாப் மஸூர் மௌலானாவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில், ஜனாப். எம். ஸி. அஹமதுவும், ஈழத் தமிழின விடுதலை இயக்கம் சார்பில் திரு. எம். மாணிக்கமும், சுயேச்சை அபேட்சகராக ஜனாப் எம். ஏ.எல். காரியப்பரும் போட்டியிடுகின்றனர்.

ஜனாப் மௌஸூர் மௌலானாவை ஆதரித்து, பிரதமர் டட்லி சேனநாயக்கா, மற்றும் சில மந்திரிகள் உட்பட, தமிழரசுக்கட்சி எம். பி க்கள், பிரசாரக்கூட்டங்களில் பேசினார்கள். ஜனாப் அகமதுவை ஆதரித்து, சுதந்திரக்கட்சி எம். பிக்களும்,

(8ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## மிளகாய், மல்லி போதியளவு இருக்கிறது

### 'பெர்மிட்' எடுப்பதில கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகளில் மல்லி, மிளகாய் போதியளவு இருக்கிறதாகத் தெரியவருகிறது. இவற்றை வாங்குவதற்கு காரியாதிகாரியிடம் 'பெர்மிட்' பெறமுடியாமல் பொதுமக்கள் கஷ்டமடைகின்றனர்.

திருமணம், அந்தியேட்டி போன்ற வைபவங்களுக்கு மல்லி, மிளகாய் வாங்கும் பொருட்டு, யாழ்ப்பாணம் காரியாதிகாரியிடம் 'பெர்மிட்' வாங்க சென்ற பலர் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளார்களாம். மிளகாய், மல்லி கையிருப்பில் இல்லை என காரியாதிகாரி தெரிவித்தாராம்.

மிளகாய், மல்லி பெர்மிட்டுக்கு போதியளவு வாங்கலாம், என பெரிய கடையிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். மிளகாய், மல்லிக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லையென்றும் அவர் கூறினார்.

உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி லீவில் சென்றுள்ளதால், மிளகாய், மல்லி கையிருப்பிலிருக்கும் வர்த்தகர் பட்டியலை, காரியாதிகாரிக்கு அனுப்பப்படவில்லையென்றும், இதனாலேயே காரியாதிகாரி, பெர்மிட் வழங்க மறுப்பதாகவும் தெரியவருகிறது. [ஈா. நி]

ஆனைக்கோட்டையில்

## ரூ.6,000 பெறுமதியான கார் திருட்டு

### சாரதிகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

வீதிகளில் கார்களை நிறுத்தி விட்டுச்செல்கையில் கார்ச் சாவியையும் காரில் விட்டுச் செல்லவேண்டாமென உதவி பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு ஆர். சி. தவராஜா பொதுமக்களை எச்சரிக்கை செய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதியில் கடந்த சிலநாட்களாக நடைபெற்றுவரும் கார்க் களவைத் தடுக்கவே அவர் மேற்கண்டவாறு கார்ச் சொந்தக்காரர்களை எச்சரித்துள்ளார். நேற்றுமுன்தினமிரவும் ஆனைக்கோட்டைப் பகுதியில் 6000 ரூபா பெறுமதியான காரொன்று களவாடப்பட்டுவிட்டதாகப் பொலிஸாருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி கார்ச்சொந்தக் காரரான சின்னத்தம்பி மகேசன் என்பவர் பொலிஸாருக்குச் செய்துள்ள புகாரில் நேற்று முன்தினமிரவு 8-30 மணியளவில் கொக்குவிலிலுள்ள ஒரு வீட்டுக்கு தான் இராப்போசனம் அருந்தச் சென்றதாகவும், ஒழுங்கை ஒன்றில் காரை நிறுத்திவிட்டு சாவியைக் காரிலேயே விட்டுச்சென்றதாகவும் திரும்பி வந்து பார்த்தபோது கார் களவாடப்பட்டு விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் நாகராஜா என்பவரையும் இன்னொருவரையும் பொலிஸார் தேடுகின்றனர். கடந்தவார இறுதியிலும் களவாடப்பட்ட காரொன்று கொழும்புத்துறையில் எரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [ஈா. நி.]

## 'நெசவு நிலையங்கள் மூலம் 48,000 பெண்களுக்கு வேலை'

### மந்திரி தஹநாயக்கா தகவல்

களுவாஞ்சிக்குடி, வெள்ளி

"தேசிய அரசாங்கம் இந்த நாட்டைக் கையேற்றபோது நாட்டில் உணவு, உடை போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்திருந்தது. இந்த நிலையை மாற்றி இலங்கையின் பொருளாதார நிலையைச் சீரானதும் கட்டுக்கோப்பானதுமாக்க உணவு, உடை போன்றவற்றில் தன்னிறைவு பெறவேண்டிய அவசியமேற்பட்டது. இதனால் தேசிய அரசாங்கம் உணவு அபிவிருத்தியிலும், நெசவுத்தொழிலை அபிவிருத்தி செய்வதிலும் முயன்றுவருகிறது. இலங்கையின் பல பாகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆயிரம் நெசவாலைகள் நமது தேவையில் ஒருபகுதியை அபிவிருத்திசெய்துவருகின்றன."

பட்டிருப்புத் தொகுதியில் கோட்டைக்கல்லாறு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நெசவுநிலையத்தைத் திறந்துவைத்துப் பேசிய உள்நாட்டமைச்சர் கலாநிதி டபிள்யு தஹநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நமது நெசவுநிலையங்கள் மூலம் இந்த நாட்டில் தரமான சிறந்த சேலைகள் நெய்யப்படுகின்றன. இதனால் சுமார் 24000 படித்த யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன. மேலும் 24000பேருக்குவேலைவாய்ப்புகள் அளிக்கக்கூடியதாக இத்திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென ஆலோசித்து வருகிறோம். பணநிலை சீரானதும் மேற்படி திட்டம் அமுல்செய்யப்படும்.

கிராமப் பகுதிகளின் பொருளாதாரத்தை சீராக்குவதற்காகப் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள்

[8-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை இரத்தினக்கற்கள் ரூமேனியாவுக்கு ஏற்றுமதியாகும்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலிருந்து இரத்தினக் கற்களும் ஆபரணங்களும் விரைவில் ரூமேனியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படலாம். இதற்கான நடவடிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை நடத்த ரூமேனியாவிலிருந்து இங்கு வந்துள்ள நாலு பேரைக் கொண்ட தூதுகோஷ்டியொன்றுவர்த்தக அமைச்சு, கைத்தொழில் மீன்பிடி அமைச்சு ஆகியனவற்றுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன ரீதியில் வர்த்தகத்தைப் பெருக்கும் சாத்தியக்கூறுகள் இப்பேச்சு வார்த்தை முடிவில் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இப்போது ஒரு லட்சம் பவுண் தொகைக்கு நடைபெறும் வர்த்தகத்தை 5 லட்சம் பவுணுக்கு உயர்த்துவது பற்றியும் இங்கு முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தையின் போது ரூமேனிய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் 1956 ம் ஆண்டில் முதன் முதலாகச் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன் இரத்தினக் கல், ஆபரணங்கள் ஆகியவற்றை ரூமேனியாவுக்கு கூடிய அளவில் இங்கிருந்து ஏற்றுமதி செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டது. [ஈா. நி]

[எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர்பரீட்சைக்கான 'பொது அறிவும் உள்ளூர் அறிவும்' மாதிரி வினா விடைகளை 6-ம், 7-ம் பக்கத்தில் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரசபை, பருத்தித்துறை
# கேள்வி விண்ணப்ப அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகளுக்குரிய கேள்வி விண்ணப்பங்கள் மேற்படி சபைத் தலைவரால் கோரப்படுகின்றன:-

1. விநாயக முதலியார் தெருத் திருத்துதல்.
2. தம்பசெட்டித்தெரு திருத்துதல்.
3. 4-ம் குறுக்குத் தெரு திருத்துதல்.
4. பெருந் தெரு [வட்டாரம் 9] திருத்துதல்.
5. பெருந்தெரு [வட்டாரம் 8] திருத்துதல்.
6. வக்கமோடை ஒழுங்கை கல்போட்டு, தார் ஊற்றல்.
7. சவணுய் ஒழுங்கை கல்லுப் போட்டு தார் ஊற்றல்.
8. சென்ற் மேறி மேற்கு ஒழுங்கை (St. Maryis Church West Lane) கல்லுப்போட்டு தார் ஊற்றல்.
9. ஓடக்கரை ஒழுங்கையில் வடிகால் கட்டுதல்.

கேள்வி விண்ணப்பங்கள் 29-2-68 நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக இரு பத்திரங்களில் நிரப்பப்பட்டு தலைவர், நகரசபை பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இவற்றிற்குரிய விண்ணப்பப்படிவங்கள் 26-2-68 நண்பகல் பன்னிரண்டு மணிவரை இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி விண்ணப்பப்படிவங்கள் பெறுபவர் ரூபா 50/- பிணைப்பணமும், ரூபா 5/- பிரவேசப் பணமும் செலுத்தவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறுபவர்களின் பிணைப்பணம் திருப்பிக்கொடுபடமாட்டாது.

மேற்படி வேலைகளின் முழு விபரங்கள் அறிய விரும்புபவர்கள் நகரசபைக் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

தலைவர்,
நகரசபை.
பருத்தித்துறை.

நகரசபைக்காரியாலயம்,
பருத்தித்துறை.
15-2-1968
453

## தேவை

புலோலி ப. நோ. கூ. ச. சமாசப் பேக்கரியில் வேலை செய்ய அனுபவம் திறமையுடைய பேக்கர்கள்தேவை. சம்பளம்: ரூ. 125/--ரூ 175/-

10X ரூ 5/- (எல்லாப்படிகளும் உட்பட)

விண்ணப்பம் முடிவுதிகதி:- 10-3-68.

தலைவர்,
புலோலி ப.நோ.கூ.ச. சமாசம்,
பருத்தித்துறை.
452

## புனித தொம்மை அப்போஸ்தலரின் நாடகம்

மாதகலில் பரிசுத்த லூர்து நாயகியின் நவ நாள் முடிவு தினத்தை முன்னிட்டு. புனித தொம்மை அப்போஸ்தலரின் நாடகம், 18-2-68 ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ச்சி 19-2-68 திங்கட்கிழமையும் மாலை 7-30 மணிக்கு புனித தொம்மை அப்போஸ்தலர் ஆலய முன்றலில் அக் கோயிற் கிறீஸ்தவர்களால் விமரிசையாக நடாத்தப்படும். 454

## மந்திரி நடவடிக்கை

களுவாஞ்சிக்குடி, வெள்ளிக்கட்டிவெல்லம் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்காக வேண்டிய பதநீரைப் பெற தென்னை, பனை போன்ற மரங்களில் பாணி எடுக்க உத்தரவுப் பத்திரங்களை தேவையான சங்கங்களுக்கு உடனே வினியோகிக்குமாறு மாவட்ட அதிபருக்கு உள்நாட்ட மைச்சர் விசேட உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன் மூலம் வெள்ளைச் சீனியால் பொதுமக்களுக்கு ஏற்படும் வீண் செலவையும் நீரழிவு போன்ற வியாதிகளைத் தடுப்பதுடன் உள்நாட்டில் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது என்றார்.

MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45P.M.
John Wayne, Deau Martin
in
The Son of Kathie Elder
[Technicolor & Pauavrsion]

## வேலைதேவை

58 வயது இளைப்பாறிய கணக்காளர் ஊதியமின்றி தேவஸ்தான, கல்வி, மத மற்றைய தர்மஸ்தாபன மொன்றில் சேவைபுரிய விருப்பமுள்ளார். தங்குவதற்கு இடமும் சாப்பாட்டு வசதியும் செய்து கொடுத்தல் வேண்டும். அதற்குரிய பணம் அவரிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க: விளம்பர இல. 1731, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1731

## கல்வி

வகுப்புகள்

6-ம் வகுப்பிலிருந்து ஜி.சி.ஈ. வரை விசேஷ விஞ்ஞான / வர்த்தக / சிங்கள / ஆங்கில பாடங்களுக்கு மாணவ மாணவிகள் விண்ணப்பிக்கவும் யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி. (Jaffna Tutorial College) 60, அரசடி வீதி, (தட்டாதெரு சந்தி) யாழ்ப்பாணம். 1875

## ஆயச்சேவை சீர்கேடு

காரைநகர், வெள்ளி

காரைநகர் - ஊர்காவற்றுறை ஆயச்சேவையில் ஈடுபட்டுள்ள பாதைப் படகு அடிக்கடி பழுதடைவதால் பொதுமக்கள் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். சேவையில் ஈடுபட்டிருந்த மாருதப்புரவி பழுதடைந்து 3 வருடங்களாகியும் இதுவரை அது திருத்தப்படவில்லையாம்.

தற்சமயம் சேவையிலீடுபட்டுள்ள பாதைப் படகில் இயந்திரமும் இல்லையாம். இதுபற்றி நிறைவேற்று பொறியியலாளர் இப்பகுதி எம். பி.க்கும், அரசாங்க அதிபருக்கும் அறிவித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி உடன் நடவடிக்கை கோருவதென காரைநகர் கிராமசபையின் மதாந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
8வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00, & 9-45 p.m.
Brigitte Bardot &
Jeanne Moreau
in
VIVA MARIA
[Eastman Color]

# வரி விளம்பரம்

## தேவை

சீமெந்ட்பைக்கெட்டுகள்;

வெற்று சீமெந்ட் பைக்கெட்டுகள் தேவை மில்க் வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன்துறைவீதி யாழ்ப்பாணம். போன்:7233 1726

கல் உடைக்கும் தொழிலாளர்கள் தேவை. கியூப்புக்கு ரூ 10/- வீதம் நாள் சம்பளம். விண்ணப்பிக்கவும்:- எச். எம். ஆசிர்வாதம், உபதபாற் கந்தோர், ஊவ குடாஓயா, திசமாராம வழியாக. 1811

காடு திருத்தும் கொந்தராத்துக்காரர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்:— எச். எம். ஆசீர்வாதம், உபதபாற்கந்தோர், ஊவா குடாஓயா, திசமாராமவழியாக. 1812

தொகையான தொழிலாளர்களைக்கொண்ட 1000 ஏக்கர் பண்ணைக்குக் 'கண்டீன்' நடத்துவோர் தேவை. விண்ணப்பிக்கவும்: எச். எம். ஆசீர்வாதம், உபதபால் கந்தோர், ஊவ குடாஓயா, திசமாராம வழியாக. 1813

முதிரை ரூ 8/-, மில்ல ரூ 7/50, ஹல்மில்ல ரூ 9/50, பாலு, மெற்தோர, அலம்ப, கஹமல்ல, நெரலு, கொலன்ன, வீர, கிலிகுலா மற்றும் கல்குலியா ரூ. 7/- முதலியன கியூபிக் அடி வீதமாக பிரதான வீதியில் கொள்வனவாளரின் லொறிகளுக்கு ஒப்படைக்கப்படும். சுற்றுவட்டம் சுமார் 3 அடி. விண்ணப்பிக்கவும்:— எச். எம். ஆசீர்வாதம். ஊவா குடா ஓயா, திசமாராம வழியாக. 1814

## விற்பனைக்கு

500 வெற்று பக்கீஸ்பெட்டிகள் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். அரஸ்கோ இன்டஸ்றீஸ், பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1738

## விற்பனைக்கு

வான்

CV 6000 தொடர்பு இலக்கமுள்ள ஒஸ்டின் வானும் (பிஸ்டன் அளவு 30) மோட்டருடன் கூடிய ஸ்பிரே பெயின்டிங் மிஷினும் (Air Compressor) விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். சிலோன் இன்டஸ்றியல் இன்ஜினியரிங் வேக்ஸ், 150, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1730

லொறி:

நல்ல நிலையில் உள்ள 33 சிறி மொடல் லோட் மாஸ்றர் லொறி விற்பனைக்கு உண்டு வி. தம்பிராசா, கொன்ராக்றர், வட்டுமேற்கு வட்டுக்கோட்டை. 1714

காணி:

தோட்டச் செய்கைக்கு அல்லது நெல் பயிர்ச் செய்கைக்கு வாய்ப்பான 700 பரப்புக்காணி கண்டி வீதியில் 170-ம் கட்டையில்வடக்கே திரும்பும் கல்றோட்டிலிருந்து 1/2 கட்டை தூரத்தில் மல்வில் என்னும் கிராமத்தில் தெருவையும் குளத்தையும் அண்டியதாக விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: பே. அ. சேனாதிராசா, 8, சோமசுந்தரம்வீதி சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் 1716

## தேவை

தாதியர்:


தாதியராகப் பயிற்சிபெற விரும்பும் தகுந்த ஆங்கில அறிவுள்ள பெண்கள், தராதரம், வயது முதலிய சான்றிதழ்களுடன் செயலாளன், தீவுப்பகுதி ஐக்கிய வைத்தியசாலை ஊர்காவற்றுறை என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 1729

## கல்வி


வகுப்பு:

தொழில்நுட்பக் கல்லூரி பிரவேச வகுப்புக்கள் ஆரம்பம்: 20-2-68. பிரவேசப் பத்திரங்கள் இலவசம். College of Education, பழைய பஸ்நிலையம் எதிராக, யாழ்ப்பாணம். 1732

கெப்பிட்டல் [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
மைலன் [ஜிந்துப்பிட்டி]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மொடர்ன் [பதுளை]
ராஜ் [நீர்கொழும்பு]
ரவிச்சந்திரன், கல்பனா, நாகேஷ்
நடித்த



மதராஸ் To பாண்டிச்சேரி



நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30க்கும்
தினசரி பிற்பகல் 2-30க்கு மெற்னி உண்டு.
* உள்ளத்து உணர்வுகளை தட்டியெழுப்பும் உணர்ச்சிமிக்ககதை!
* கருணாநிதியின் கனல் தெறிக்கும் வசனங்கள்!
* அமுதமான பாடல்கள், தேனினுமினிய இசை!
எஸ். எஸ். ராஜேந்திரன்
காஞ்சனா — தேவிகா
முத்துராமன் — சுந்தரராஜன்
நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
மறக்க முடியுமா?
(பாஸ் சலுகைகள் ரத்து)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
எம். ஜி. ஆர். - பானுமதி
சரோஜாதேவி
நடித்த
நாடோடி மன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் ஈழத்து புத்தக விற்பனையாளர்களுக்கு பயிற்சி

லண்டன், பெப் 16

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உட்பட 17 நாடுகளைச் சேர்ந்த புஸ்தக விற்பனையாளர் பிரிட்டனில் நடைபெறவிருக்கும் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றவிருக்கிறார்கள். பெப்ரவரி மாதம் 18-ம் திகதி ஆரம்பமாகும் இந்த பயிற்சி வகுப்புகளில் 25 பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். "புஸ்தக விற்பனையும் விநியோகமும்" என்னும் பொருள்பற்றிய இப்பயிற்சி வகுப்புக்கள் மூன்று மாதங்கள் வரை நடைபெறவிருக்கின்றன. பிரிட்டிஷ் கவுன்சில் இந்தப் பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்திருக்கின்றது.

இலங்கையின் பிரதிநிதியாக திரு ஜோர்ச் ரூபசிங்கா இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்கிறார். இவர் கொழும்பிலுள்ள பிரபல நூல்விற்பனை நிலையமான எச். டபிள்யூ கேவ் அன்ட் கம்பனியைச் சேர்ந்தவராகும்.

பிரிட்டிஷ் புஸ்தகவிற்பனையாளர் சங்கத்தினதும் பிரிட்டிஷ் புஸ்தக பிரசுரிப்பாளர் சங்கத்தினதும் ஒத்துழைப்புடன் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் பிரசுரத்துறை பற்றி அறிமுகம் செய்து வெளிநாட்டு சந்தைகளுக்கென பிரிட்டனில் பிரசுரமாகும் புஸ்தகங்கள் பற்றி தெரியப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்தப் பயிற்சி வகுப்புக்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றன.

இந்தப்பயிற்சி வகுப்புக்களின் முதல் நான்கு வாரங்களும் விரிவுரைகள் மற்றும் விவாதங்களில் கழிக்கப்படும். பின்னர் வெளிநாட்டு பிரதிநிதிகள் லண்டன் நூல் நிலையம் பென்குவின் போன்ற பிரபல்ய பிரசுர நிலையங்களைச் சென்று பார்வையிடுவர். ஆக்ஸ்போட் சர்வகலாசாலை அச்சகத்திற்கும் இவர்கள் விஜயம் செய்வார்கள்.

வவுனியா, மன்னார்

# ஆசிரியர்களுக்கு அங்கேயே சம்பளம்

அச்சுவேலி, வெள்ளி

வவுனியா மாவட்ட கல்விக் கந்தோர் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள ஆசிரியர்கள் அங்கேயே தமது சம்பளத்தைப் பெறக்கூடிய நிலை விரைவில் ஏற்படுமெனத் தெரிய வருகிறது. இப்பொழுது அவர்களுக்கான சம்பளம் யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரிலிருந்தே அனுப்பப்பட்டு வருகிறது.

மன்னாரிலுள்ள ஆசிரியர்களும் இவ்விதம் தமது சம்பளத்தை யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொள்ளாது வவுனியாவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக விருக்குமெனத் தெரிய வருகிறது.

கல்வி அலோசகரின் கீழ் இயங்கிவந்த மன்னார்கல்விக் கந்தோர் இம்மாதம் முதல் திகதியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப்போது க்கந்தோர் பிரதம கல்வியதிகாரியின் கீழ் இயங்கி வருகிறது.

# மனைவிக்கு 'அசிட்' ஊற்றினாராம்

## கணவர் றிமாண்டில்

காலி, வெள்ளி

தனது மனைவிக்கு அசிட் திராவகத்தை ஊற்றினாராம். குறிப்பிட்ட நபர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். யக்கலமுல்லை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த யூ. டி. கன்டி என்பவரே இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டவராவார்.

யூ. டீ. கன்டி என்பவர் தனது மனைவி பி. எல். பாண்டுவதிக்கு அசிட்திராவகம் ஊற்றியதாகபொலிஸ் சார்ஜன் திரு எஸ் ஏ. நியூமானால் தொடரப்பட்ட இவ் வழக்கு காலி மாஜிஸ்ரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனைவி பி. எல். பாண்டுவதி சாட்சியமளிக்கையில் சம்பவதினத்தன்று [இம்மாதம் 7-ம் திகதி] தாம்மதிய போசனம் தயாரித்துக் கொண்டிருந்ததாகவும் குடிபோதையில் வந்ததனது கணவர் சமையல் முடியவில்லையா? என்று கேட்டு தனது மயிரைப்பிடித்துஇழுத்து அடித்து. ஒருபோப்பைக்குள் இருந்த அசிட் திராவகத்தை தன்மேல் ஊற்றியதாகவும் பாடசாலையிலிருந்து வந்த தனது மகன் ஆனந்தா குறுக்கிடவே அசிட் திராவகம் தங்களிருவரின்மேல் பட்டதாகவும் காயமடைந்த எங்களிருவரில் எனது மகன் ஆனந்தாவை தமதுகணவர் காலி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றதாகவும் தம்மை தமதுமைத்துனி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றதாகவும் தெரிவித்தார்.

விசாரணைநடத்திய மாஜிஸ்திரேட் சந்தேக நபரை இம்மாதம் 24-ம்திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு இவரை 24-ம் திகதி கோட்டில் ஆஜராகும்படி தெரிவித்தார்.

---

## மாவட்ட சபையை இயங்க வைக்க வேண்டும்

காரைநகர், வெள்ளி

லண்டன் செல்லும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய மாணிக்கவாசகர் திரும்பி வரும்போது மாவட்டசபைகளுக்கு ஆக்கபூர்வமான வேலைத் திட்டத்தை அளித்து மாவட்ட சபைகளை இலங்கை பூராவும் இயங்க வைப்பார் என்பதில் சந்தேகமில்லை என காரைநகர் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் மாணிக்கவாசகரின் சேவை நலம் பாராட்டு தீர்மானத்தை ஆமோதித்து பேசிய ஒன்பதாம் வட்டார உறுப்பினர் திரு. வி. கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

# பிணையில் செல்ல அனுமதி

குரும்பசிட்டி, வெள்ளி

சங்கானையைச் சேர்ந்த இரு கோஷ்டியினருக்கிடையில் ஜனவரி மாதம் 31-ந் திகதி பண்டத்தரிப்பில் நிகழ்ந்த கலவரத்தில் பி. சற்குணம் என்பவர் கத்தி வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகியது சம்பந்தமாகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த மூவரையும் மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் தலா 500 ரூபா பிணையில் செல்லுவதற்கு அனுமதித்துள்ளார். சங்கானை கிழக்கைச் சேர்ந்த திருவாதிரை, தேவராசா, திருநாவுக்கரசு ஆகியோரே பிணையில் போவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களாவர். இவர்கள் மீண்டும் இம்மாதம் 28-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளனர்.

---

## ஆவரங்கால் கொலை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

ஆவரங்கால் சந்தி படுகொலை வழக்கு மீண்டும் இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இவ்வழக்கில் அச்சுவேலியைச் சேர்ந்த பரமானந்தன் லிங்ககுமாரைக் கொலைசெய்ததாக ஆவரங்காலைச் சேர்ந்த தம்பிராசா மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இறந்தவரைப் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் சாட்சியமளித்த பின்னர் வழக்கு மேல் விசாரணைக்காக இம்மாதம் 25-ம் திகதிக்கு பின்போடப்பட்டது.

எதிரிதரப்பில் புரக்டர் நடராசாவின் அனுசரணையுடன் வழக்கறிஞர் எஸ். தம்பித்துரை ஆஜரானார். கோப்பாய் பொலிஸார் வழக்கை நடத்தினர்.

[கா. நி]

---

## இளம்பெண் பெற்றோருடன் சென்றார்

குரும்பசிட்டி, வெள்ளி

சுன்னாகம் பொலிஸார் குப்பிளானைச் சேர்ந்த எஸ். பாலசிங்கம், வி. வீரசிங்கம் ஆகிய இருவாலிபர்கள்மீது சந்திராதேவி என்ற இளம் பெண்ணை பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச்சென்றதாகவும், இதற்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சுமத்தி தொடர்ந்துள்ள வழக்கு மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போதுமேற்படி இளம்பெண் தமது பெற்றோருடன் கூடிச்செல்ல மறுப்புத் தெரிவித்ததுடன், முதலாம் எதிரியான பாலசிங்கம் என்பவருடன் கூடிச் செல்லவிரும்புவதாகவும் தெரிவித்தார். இரட்சணிய சேனையின் பாதுகாப்பிலிருந்து வந்த இப்பெண்ணை முதலாம் எதிரிக்கு மணம் முடித்துக்கொடுக்க பெற்றோர் சம்மதம் தெரிவித்ததன் பேரில் இளம் பெண் பெற்றோருடன் வீட்டிற்கு போவதற்கு அனுமதிக்கப்பட்டார்.

மேல் விசாரணையை இம்மாதம் 22-ந் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வ [illegible] ஆஜராகியிருந்தார்.

# செய்தித் திரட்டு

இனிமேல் 7-ம் வகுப்புக்கு மேற்பட்ட பாடசாலைமாணவர்களுக்கு இலவச மதிய போசனம் அளிப்பதில்லை எனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. 7-ம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் இம்மதிய போசனத்தை சாப்பிடுவதில்லை எனக்கூறப்படுவதனாலேயே இப்படித் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது. விரைவில் அதிபர்களுக்கு இதற்கான சுற்றறிக்கை அனுப்பப்படவுள்ளது.

### கடும் வரட்சி

உடுகமப் பகுதியில் கொடிய வரட்சி நிலவுவதால் ஜின்கங்கையின் நீர் மட்டமும் வற்றியுள்ளது. குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தோட்டங்களில் வேலை நாட்களும் குறைக்கப்பட்டுள்ளதாம்.

### "தமிழரசை அகற்றிவிடுக"

தமிழரசுக்கட்சியுடன் வைத்திருக்கும்சகலதொடர்புகளையும் அகற்றிவிடுமாறு பிரதமர் டட்லி சேனநாயகாவைக் கோரும் தீர்மானம் ஒன்று பிட்டிகல வெலிஹேன கிராமசபையில் நிறைவேறியுள்ளது.

### ஓய்வு பெறுகிறார்

காலி அரசாங்கஅதிபரான திரு. டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின்ட் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். உதவி அரசாங்க அதிபர் திரு. பி. ஏ. டி. குணசிங்கா 1-3-68 தொடக்கம் காலி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### இலங்கை திரும்புவார்

மக்கள் சீன வானொலியின் தமிழ் நிகழ்ச்சிப்பிரிவில் கடமையாற்றும் மாதகல் வாசியான திரு. கந்தசாமி சில மாதங்களில் இலங்கை திரும்புவாராம்.

# "ஆசிரியரை இடமாற்றம் செய்யாதீர்"

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

"உயர்தர வகுப்புகளில விஞ்ஞான பாடங்களைப் போதிக்கும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரை இடமாற்றம் செய்வதில்லை என இன்றைய தேசிய அரசாங்கத்தின் பங்காளிகளான வட பகுதி எம். பி.க்களுக்கு வாக்குறுதியளித்த கல்விப் பகுதியினர் எமது கல்லூரியில் உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியர் திரு. வீ. சுந்தரலிங்கத்தை மாகாணத்துக்கு வெளியே இடமாற்றஞ்செய்துள்ளது சிந்தனைக்கு விருந்தூட்டும் செயலாகும். மேலும் பத்து வருடச் சேவை பூர்த்தி செய்யாத இவ்வாசிரியர் எவ்வித அடிப்படையில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளாரென்பதைப் பாராளுமன்றம் ஆராயும் திறனற்றதாக இருந்தால், அப்பாராளுமன்றத்தின் ஆதிபத்தியத்தில் மக்கள் நம்பிக்கை இழக்கவேண்டி வரும்".

இவ்வாறு உரும்பராய் இந்துக்கல்லூரி மாணவர் மன்றம் மேற்படி கல்லூரி ஆசிரியர் திரு வீ. சுந்தரலிங்கத்தின் இடமாற்றத்தை எதிர்த்து கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, கல்விப்பதி ஆகியோருக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

---

### நோயாளர்கள் அவதி

கொம்பனித்தெரு, வெள்ளி

கொழும்பு மஹரகமபுற்றுநோயாளர் வைத்தியசாலையில், இலங்கையின்பல பாகங்களிலிருந்தும் வரும் புற்றுநோயாளர்களை அதிகாரிகள் உடனடியாக வார்ட்டில் அனுமதிக்க மறுப்பதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்படி வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டநோயாளிஒருவரை உடனடியாக வார்ட்டில் அனுமதியாததால், அந்தநோயாளி வைத்தியசாலை தாழ் வாரத்தில் இரண்டு நாட்கள் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

இங்கு வேலை செய்பவர்கள் தமிழ் தெரியாத காரணத்தால இங்கு வரும் தமிழ்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் பெரிதும் கஷ்டமடைவதாக தெரியவருகிறது.

---

### உடுவில்

## கிராமசபை தீர்மானங்கள்

உடுவில் வெள்ளி

சென்ற வருடம் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது உடுவில் கிராமசபை அங்கத்தவர்கள் அகதிகளாக இருந்த மக்களுக்கு செய்த உதவிகளுக்கும், உணவும், தங்குவதற்கு இடமளித்தவர்களுக்கும் உடுவில்கிராமசபைக்குட்பட்ட கிராமசேவையாளர்கள், உடுவில் கிராமசபையினருடன்சேர்ந்து ஒத்துழைத்தமைக்கு பாராட்டுத்தெரிவிக்கும் தீர்மானம் உடுவில் கிராமசபைக்கூட்டத்தில்ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் குப்பைகளைக்கொட்டிப் பொதுஜனங்களுக்கு ஊறுவிளைவிப்பவர்கள் மீது சுகாதார இலாகாமூலம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## "சிங்களக் கடிதங்கள்"

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

"கடந்த ஆண்டு உரும்பராய்ப் பட்டினசபையின் விசேட கூட்டமொன்றில் மேற்படி சபையின் சகல கடிதப் போக்குவரத்துகளும் தமிழிலேயே நடைபெறவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும், இன்றுவரை இப்பட்டினசபைக்கு உள்ளூராட்சி அமைச்சிலிருந்து வரும் கடிதங்கள், தமிழ் மொழிபெயர்ப்பும் இல்லாத சிங்களக் கடிதங்களாகவே இருப்பதைத் தலைவர் அறிவாரா?

இவ்வாறு உரும்பராய் பட்டினசபை 6-ம் வட்டார அங்கத்தவரும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உரும்பராய்க் கிளைச் செயலாளருமான திரு. க. தவஞானம் பட்டினசபைத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். அடுத்த கூட்டத்தில் இவ்விடயம்பற்றிய விவாதமொன்று நிகழவிருப்பதாகவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிறருக்குக் கொடுக்க வேறெதுவுமில்லாவிடினும் ஓர் அன்பான உண்மையான புன்சிரிப்பையாவது தாருங்கள். இதற்குச் செலவு எதுவுமில்லை. என்ருலும் இதனுல் மற்றவருக்குப் புதுத் தைரியமும் பலமும் ஏற்பட்டு, அவரது துக்கமும் போய்விடுகிறது. — சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க௵ மாசி 5ஆம் உ (17-2-68)

## மலேரியா

நாட்டில் மலேரியா பரவவில்லை என்றும், பத்திரிகைகள் இதுபற்றி மிகைப்படுத்துவதாகவும் கூறிய சுகாதார அமைச்சர் இப்போது தமது தவறை ஒப்புக்கொண்டு பத்திரிகைகள் கூறுவதே சரி என்று அறிவித்துள்ளார் அமைச்சர். இவ்விதம் தமது தவறை துணிச்சலுடன் ஒப்புக் கொண்டதற்காக அவரைப் பாராட்ட வேண்டும்.

தவறை ஒப்புக் கொண்டது மட்டும் போதாது; பரவும் இக்கொள்ளை நோயைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையிலே சுமார் 40 வருடங்களுக்குமுன் மலேரியா நோய் பரவி பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலி வாங்கியது அப்போதிருந்த சுகாதார அதிபர் தக்க திட்டம் தயாரித்து கொசுக்களுடன் தீவிரமாகப் போராடி இந்நாட்டில் மலேரியாவையே அடியோடு ஒழித்தார். ஆனல் இப்போது மீண்டும், யாழ்ப்பாணம் உள்ளிட்டு பல பகுதிகளிலும் மலேரியா பரவி வருவதால், இந்த ஆபத்தை நீக்க தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பிரதமர் இதற்கு முதல் முக்கியம் அளித்து கூடுமான நடவடிக்கை எடுக்க வருவது வரவேற்கத்தக்கது.

மலேரியா ஆபத்து மீண்டும் தலைதூக்கியுள்ளதற்கு, அமெரிக்க தடுப்பு மருந்து உதவியை நிறுத்தியதுதான் காரணமென்று ஒரு செய்தி கூறுகின்றது. 1963-ம் வருடத்தில் அமெரிக்க பெட்ரோல் எண்ணெய் ஸ்தாபனங்களை தேச உடைமை ஆக்கி அதற்கு நஷ்டஈடும் அளிக்காத காரணத்தால் அமெரிக்கா தான் அளித்த உதவிகளை இதற்குப் பதிலடி கொடுத்ததுபோல் நிறுத்தியது. பின்னர் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம், நஷ்டஈட்டுப் பணத்தைக் கொடுத்தும் கூட அமெரிக்கா இந்த முக்கியமான உதவியை இனியும் கொடுக்காமல் இருப்பது உண்மைதானு?

மனித சுகாதாரத்துக்கு மிக முக்கியமான உதவிகளை அமெரிக்கா போன்ற பெரிய நாடு எக்காரணத்தாலும் நிறுத்துவது நியாயமோ, அழகோ அல்ல. நஷ்டஈடு கொடுத்த பின்னரும் அந்த தடுப்பு மருந்துகளைக் கேட்காமல் இலங்கை அரசாங்கம் அசமந்தமாக இருந்துவிட்டதா? கேட்டிருப்பின் அதை அமெரிக்கா மறுத்திருக்குமென்று நாம் கருதவில்லை. இது எப்படியாயினும், உடனடியாகத் தடுப்பு மருந்துகளை அதிகம் வரவழைத்து, பரவிவரும் இந்த நோயைத் தடுக்க எல்லா நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்குமென்றே நம்புகிறோம்.

யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்குப் பக்கத்திலுள்ள தாராகுளத்தில் 'ஸால்வீனு' என்னும் படர் தாமரை படர்ந்து, கொசு உபத்திரவம் நகரில் அதிகரித்துள்ளதாயும், அதை அகற்ற வேண்டுமென்றும் மக்கள் குரல் கேட்கின்றது. இக்குளத்தில் படர் தாமரை எப்படிப் பரவியதென்பது தெரியவில்லை. காரணம் எதுவாயினும், முதல் நடவடிக்கையாக கொசுவை ஏராளமாக உற்பத்தி செய்யும் இக்குளத்தை சுத்தப்படுத்த வேண்டும். கொசுதான் மலேரியா பரவுவதற்கு முக்கிய காரணமென்பது அதிகாரிகளுக்குத் தெரியாததல்ல.

இதுவிஷயத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். சம்பவ காலத்தில் யாழ்ப்பாணத்திலே கொசு உபத்திரவம் பெரிதும் அதிகரித்துள்ளது. சாக்கடை தண்ணீருக்குப் போக்கிடமின்றி ஆங்காங்கே அசுத்த நீர் தேங்குவதால், கொசுக்கள் கோடிக்கணக்கில் பெருகுகின்றன. தங்கள் தங்கள் வீடு வளவுகளில் அசுத்தநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் மாநகரசபைக்கு இதில் அதிக பொறுப்புண்டு. யாழ்ப்பாணத்திலே சாக்கடைத் திட்டம் சரியாகவில்லை. சில இடங்களிலே அசுத்தநீர் தேங்குவதாக சுகாதார அதிகாரிகளிடம் பல்முறை எடுத்துக் கூறியும் அவர்கள் அதுபற்றி அலட்சியமாக இருப்பதாயும், எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் நமக்குப் பல புகார்கள் கிடைத்துள்ளன. இம் முக்கிய விஷயத்தில் மாநகரசபை கவலையீனமாக இருப்பது மனிதருக்குச் செய்யும் பெரிய குற்றம். மலேரியா போன்ற தொற்றுநோய் பரவும் இச்சமயத்தில், மாநகர சபையும் அரசாங்கமும் ஒத்துழைத்து, இப்பகுதியில் கொசுக்கள் பெருகாமலும், மலேரியாநோய் பரவாமலும் தடுக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்க ஆவன செய்வரென்றே நம்புகிறோம்.

## குறைந்த சம்பளம்

தொழிலாளருக்குக் குறைந்த சம்பளம் கொடுத்தால்தான் ஒரு தொழில் லாபகரமாக நடக்குமென்றும், நாட்டின் பொருளாதாரமும் வளருமென்றும் உள்ள ஒரு கருத்தை இலங்கை வந்துள்ள திரு மாதுர் என்ற சர்வதேச தொழிற் சங்க அதிகாரி மறுப்பது குறிப்பிடத்தக்கதாகும். நுவரேலியாவில் நடைபெற்ற இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டுக்கு வந்திருந்த மாதுர், பொருளாதாரத் துறையில் அனுபவம் மிக்கவர், அவர் இது பற்றி பேசுகையில், ஒரு தொழிலிலே ஈடுபட்டமக்கள், மகிழ்ச்சியுடன் உற்சாகமாக வேலைசெய்தால் தான் அத் தொழில் சுபீட்சமாக நடக்குமென்றும், மக்கள் திருப்தியுடன் இருந்தால்தான் நாடும் செழிப்பாக முன்னேறுமென்றும் சரியாக அறிவுறுத்துகிறார்.

தொழிலாளர் சம்பளம் குறைவாக இருந்தால் தான் நமது சரக்கு விலையும் குறைந்து, ஏற்றுமதி அதிகரிக்குமென்றும் உலகமார்க்கெட்டில் போட்டியை சமாளித்து நமது வியாபாரமும் பெருகுமென்றும் பொதுவாக ஒரு கருத்துண்டு. எளிய தொழிலாளரின் வயிற்றில் அடிக்கடி அடிக்கத்தான் நாட்டின் பொருளாதாரம் உயருமென்று கருதுவது அம்மக்களுக்குச் செய்யும் மாபாவமான துடன் நாட்டுக்குச்செய்யும் பெருங்கேடுமாகும். ஒரு நாட்டின் மக்கள் திருப்தியாக வாழுவதுதான் நாட்டின் சுபீட்சத்துக்கு அடையாளமேயன்றி அதிகமான ஏற்றுமதிப் புள்ளிவிபரங்கள் அல்ல.

தொழிலாளருக்குக் குறைந்த சம்பளம் கொடுத்தால் முதலாளிகள் கையில் அதிக பணம் சேரவும் அது நாட்டின் தொழில் அபிவிருத்திக்கான மூலதனமாகப் பயன்படுமென்ற தவறுன கருத்தையும் திரு. மாதுர் சரியாக இடித்துக்காட்டுகின்றார். மக்கள் மறைமுகமாகக் கொடுக்கும் வரிகளே நாட்டின் மூலதனமாகச் சேருவதாயும், முதலாளிகள் கையில் சேரும் அதிக லாபம், ஊதாரிச்செலவு கள்ளத்தனம், பதுக்கல் முதலிய ஊழல்களுக்கு இடமளிக்குமென்றும் எச்சரிக்கிறார். மக்களுக்காகத்தான் தொழில்களேயன்றி தொழில்களுக்காக மக்களல்ல. ஆகவே சம்பள நிர்ணய விஷயத்தில், சிறப்பாகத் தோட்டத் தொழிலாளர் சம்பள நிர்ணய விஷயத்தில் இனியாவது அதிக கவனம் செலுத்தப்படுமா?

# உணவுற்பத்தியில்

உணவுற்பத்தித்துறையில் கடந்த பத்துவருட காலத்தில் நெல் உற்பத்தி சுமார் 70 சத விகிதம் அதிகரித்துள்ள போதிலும், எமக்குத் தேவையான அரிசியில் அரைவாசிக்கும் சிறிதளவு குறைவாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. 1965-66 ஆம் ஆண்டில் எமது இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதியில் ரூபா 83 58,20,000 அல்லது 45.18 சத விகிதம் முக்கியமான விவசாய இறக்குமதி பொருள்களான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு செலவு செய்யப்பட்டது. உணவுப் பொருட்களுக்கான இச்செலவில் அரிசிக்காக ஏற்பட்ட செலவு ரூபா 28,95,35,186 ஆகும்.

இலங்கைப் பொருளாதாரத்தின் இந்த அம்சங்கள் எமது நாட்டின் விவசாய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பொதுவான கொள்கையை நிச்சயிக்கின்றன. ஏற்றுமதிப் பொருட்களல்லாத விவசாயத்துறையில், உள்நாட்டு உணவுற்பத்திக்கும் மக்களின் மொத்த உணவுத் தேவைகளுக்குமிடையில் காணப்படும் இடைவெளியைத் துரிதமாக நிரப்பும் பொருட்டு, இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய உள்நாட்டு உணவுப் பொருட்களில் எத்தனை பொருட்களை எவ்வளவுக்கு உற்பத்திசெய்ய முடியுமோ அவ்வளவையும் உற்பத்தி செய்வதே நோக்கமாகும்.

### அபிவிருத்தித் திட்டங்கள்

காலத்துக்குக்காலம் தயாரிக்கப்பட்ட தேசியத் திட்டங்கள், இக்குறிக்கோளை வலியுறுத்தி, அதனை அடைதற்கான கொள்கைகளையும்

விவசாயம் இலங்கைப் பொருளாதாரத்தின் முக்[...] கையின் மொத்த சனத்தொகையான, சுமார் ஒரு [...] சம் மக்களில் 80 சத வீதத்துக்கும் அதிகமானே[...] துக்கு விவசாயத்தையே நம்பியிருக்கிறார்களென்[...] முக்கியத்துவத்தைக் கணித்துக்கொள்ளலாம். எ[...] றில் இரண்டு பங்கு ஏற்றுமதிக்காக உற்பத்தி [...] கையின் மொத்த வெளிநாட்டுச் சம்பாதிப்புகளி[...] தம் எமது மூன்று பிரதான விவசாய உற்பத்திப் [...] ரப்பர், தேங்காய் ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்[...]

வேலைத் திட்டங்களையும் வகுத்துள்ளன. '1966 முதல் 1970 வரைக்குமான விவசாய அபிவிருத்தி யோசனைகள்' என்ற தலைப்பில் விவசாயத்துக்குத் திட்டமிடுதல் பற்றி அண்மையில் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க வெளியீடு அநேகமாக இதே நோக்கத்தினையே தன்னகத் தடங்கியுள்ளது. இத் திட்டத்தில் முதன்முறையாக, பல்வேறு துறைகளிலும் இவ்வாண்டில் நிறைவேற்றப் படவேண்டிய குறிப்பிட்ட இலக்குகளைக் கொண்டநிறைவேற்று நிகழ்ச்சி நிரல் ஒன்றும் உள்ளது. விவசாய உணவு அமைச்சினை, நடுநாயகமாகக் கொண்டு மாவட்ட ஏஜன்ஸிகள், சிறிய நிர்வாகப் பிரிவுகள்வாயிலாக விவசாயிவரையில் பரவிச்செல்லும் வகையில் நிறைவேற்று ஸ்தாபனம் மிகவும் கவனமாக வகுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் அனைத்தினதும் தீவிர ஒத்துழைப்புடன் இலக்குகள் வகுக்கப்பட்டுள்ளன நிறைவேற்றும் நடவடிக்கைகள், பல்வேறு நிர்வாக நிறுவனங்களாலும் இகர ஏஜன்ஸிகளாலும் பண்ணை மட்டத்திலிருந்து கவனமாக அவதானிக்கப்பட்டு வருகின்றன.

நெல் உற்பத்தியை அதிகரிப்பதிலேயே அரசாங்கம் ஆக்கூடிய சிரத்தைஎடுத்து வருகிறது. இறக்குமதிசெய்யப்படும் அரிசி நாட்டிற்குத் தேவைப்படும் அரிசியில்ஒரு பெரும்பாகமாக இருப்பதால் நெல் உற்பத்திக்கு அளிக்கப்படும் இந்த முக்கியத்துவம் இயற்கையானதே.

1958-ல் 5 20,000 தொன்னாக இருந்த மொத்த அரிசி உற்பத்தி [குத்தப்பட்ட அரிசி] 1967-ல் 7,70,000 தொன்னாக அதிகரித்துள்ளது. மேலும் இதேகாலத்தில் நெல் விளைவிக்கப்பட்ட நிலப்பரப்பு 13,80,000 ஏக்கரிலிருந்து 16 00,000 ஏக்கராக அதிகரித்துள்ளது ஏக்கர் ஒன்றின் சராசரி விளைச்சலும் 1958-ல் சுமார் 34 புசலாக இருந்தது. 1967-ல் 40 புசலுக்குமேல் அதிகரித்துள்ளது. 1968-ம் ஆண்டில் நெல் உற்பத்தி கடந்தஆண்டின் மிகவும் உயர்ந்த உற்பத்தியையும் மீறிவிடுமென்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

### முதன்மை

நெல் உற்பத்தித்துறையில் இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளபோதிலும்கூட வருடாந்த அரிசி இறக்குமதியின் ஏறத்தாழ 5,00,000 தொன்னாகவே இருந்துவருகிறது. எனவே இன்னும் பலவருடகாலத்துக்கு உள்நாட்டு அரிசி உற்பத்தியை அதிகரிக்க தொடர்ந்து முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில் சந்தேகமேயில்லை. வருடமொன்றுக்குசுமார் 5 கோடிபுசலாகவுள்ள அரிசி உற்பத்தியை 1970-ம் ஆண்டளவில் 7 கோடிபுசலாக அதிகரிக்க தற்போதைய ஐந்து—வருட விவசாய அபிவிருத்தி தி[...] டம் வகைசெய்துள்ள[...] எனவே வருடமொன்றுக்[...] சுமார் 2கோடி புசல் நெ[...] அல்லது 2,30,000 தொ[...] அரிசி உற்பத்திசெய்யப்ப[...] வேண்டும். அது 40சதவிகி[...] அதிகரிப்பாகும். நெல் உ[...] பத்தியின் சராசரிவருடாந்[...] அதிகரிப்பு சுமார் 8 சத வி[...] தமாக இருக்கும்.

ஏற்கெனவேயுள்ள நெ[...] வயல்களில் நெல் உற்[...] தியை அதிகரிப்பதற்கெ[...] ஒரு வேலைத்திட்டத்தை[...] தயாரிப்பதில் பின்வரும் ந[...] வடிக்கைகளுக்கு அரசாங்[...] முக்கியமளித்துள்ளது:-

இந்நாட்டில் நெற்பயி[...] செய்யப்படும் பல்வேறு நி[...] மைகளுக்கும் இணக்கமா[...] விருத்தியடைந்துள்ள இ[...] சனைக் கண்டுபிடிக்கும் வ[...] யில் நெல் ஆராய்ச்சி வ[...] கப்பட்டுள்ளது. கிருமி[...] நோய்கள், களைகள் ஆ[...] வற்றைக் கட்டுப்படுத்[...] தற்கு விருத்தியடைந்து[...] விவசாய நுட்பங்களையு[...] நெற்பயிர்செய்கைக்கு[...] பொருத்தமான விவச[...] உபகரணங்களையும் கண்[...] பிடிக்கும் ஆராய்ச்சியி[...] கவனம் செலுத்தப்பட்[...] ளது.

○ ஒரு தாராளமான [...] விப்பணத் திட்டத்தின்[...] நெற்பயிர் செய்கைக்கு [...] சாயனப் பசளை விநியோ[...] தல்.

### விவசாயிகளுக்கு உத[...]

நெற்காணிகளில் வா[...] குடியுரிமைகள்பற்றிய சட[...] வமைப்பும் கிராமங்கள[...] விவசாயக்குழுக்களை ஸ்[...] பித்தலும்.

○ பலநோக்குக் கூட்[...] வுச் சங்கங்கள் வாயில[...] விவசாய ரசாயனப்பொரு[...] களையும் இதர விவசாய [...] கரணங்களையும் விநியோ[...] தல்

விவசாயிகள் செம்[...] யான பயிர்ச்செய்கை மு[...] களைக் கையாளவசதியளி[...] முகமாக விவசாயகடன் [...] டத்தை இலகுவாக்குதல்

○ அரிசியையும் இதர [...] சாய உற்பத்திப்பொரு[...] ளையும் வாங்குவதற்கு [...] தரவாத விலைகளும் இ[...] சந்தைப்படுத்தலும் வச[...] ளும் அளித்தல்.

○ நீர்ப்பாசன, வாய்க்க[...] வசதிகள் உள்ள இடங்க[...] அவற்றை விருத்திசெ[...] லும் இல்லாத இடங்க[...] அவ்வசதிகளைச் செய்[...] கொடுத்தலும்.

தவிர்க்கமுடியாத [...] ணங்களால பயிர்களை [...] த விவசாயிகளுக்கு [...] வித சேதத்துக்கு நஷ்ட[...] செலுத்தப்படும் ஒரு ப[...] காப்புறுதித் திட்டம்.

நாட்டில் தற்சமயம்வெ[...] நாட்டு நாணயமாற்[...] நெருக்கடி இருந்தும் [...] விளைச்சலை அதிகரித்த[...] டிராக்டர்கள், விவசாய[...] யனப் பொருட்கள், ப[...]

— லக்ஷ்மண்ரத்னபால —
(அரசாங்க பத்திரிகை உத்தியோகத்தர்)

## இன்றைய பலன்

[17-2-68]

சனிக்கிழமை

[மாசி ௴ 5உ]

திதி - திருதியை பகல் 9-18 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம் - உத்தரம் பகல் 8-56 மேல் அத்தம்.

ராகுகாலம் - 9-03 — 10-33.

சுபநேரம் - 3-03 — 4-33.

இன்று பிறந்தவர்களுக்கு புதுமையான எண்ணங்கள் மலரும். புரட்சிகரமான மலரும். களுக்கு இடமுண்டு. குடும்பம் ஒரு சிலருக்குச் சுமையாகத் தோன்றலாம் மாணவராயின் கல்வியில் அதிக கவனம் செலுத்தவும். சகோதர வழியால் சஞ்சல நிவர்த்திக்கு இடமுண்டு பண வரவுக்கு இடமுண்டாயினும் செலவும் கட்டு மீறியே இருக்கும் நாவடக்கம் இருப்பின் நன்மையுண்டு.

மேஷம் - பொருள் விரயம், பொல்லாங்கு கேட்டல்

ரிஷபம் - குரு விசுவாசம், குறிக்கோள் வெற்றி

மிதுனம் - செய்தொழில் சிறப்பு, தெய்வத்தின் துணை.

கடகம் - புத்திரர் புகழ், புதுமையில் நாட்டம்.

சிம்மம் - சிந்தனைப்புதிர், சிறிவரும் கோபம்.

கன்னி - வாழ்க்கையில் புயல், வரவும் தடைப்படும்.

துலாம் - மனை வாழ்வில் மலர்ச்சி, மனதில் ஆனந்தம்.

விருச்சிகம் - ஆசைவைக்காதே, அவதிப்படாதே.

தனுசு - தாய் வழிப் பெருமை, தரமான வாழ்வு.

மகரம் - பனிமலரிப் பார்வை, பரிவின் உதயம்.

கும்பம் - திடீர் தாக்குதல், திகைக்க வைக்கும் திருப்பம்.

மீனம் - காதல் செய், கவலைகள் பறக்கும்.

— சோதிடக்கலாநிதி —
[illegible] வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வில் தன்னிறைவு

...தாரத்தின் முக்கிய ஆதாரமாகும். இலங்
...ள, சுமார் ஒரு கோடியே பதினைந்து லட்
... அதிகமானோர் தங்கள் ஜீவனோபாயத்
...க்கிறார்களென்பதைக் கொண்டு அதன்
...ாள்ளலாம். எமது விவசாயத்தில் மூன்
...க உற்பத்தி செய்யப்படுகிறது. இலங்
...சம்பாதிப்புகளில் ஏறத்தாழ 96 சத விகி
...ய உற்பத்திப் பொருள்களான தேயிலை,
...ந்து கிடைக்கின்றது.

...அபிவிருத்தி திட்
...கைசெய்துள்ளது.
...வருடமொன்றுக்கு
...கோடி புசல் நெல்
...,90,000 தொன்
...பத்திசெய்யப்பட
... அது 40 சதவிகித
...ாகும். நெல் உற்
...சராசரிவருடாந்த
... சுமார் 8 சத விகி
...ருக்கும்.
...வேயுள்ள நெல்
... நெல் உற்பத்
...அதிகரிப்பதற்கென
...திட்டத்தைத்
...இல் பின்வரும் நட
...ளுக்கு அரசாங்கம்
...ரித்துள்ளது:-
...டில் நெற்பயிர்
...டும் பல்வேறு நிலை
...தும் இணக்கமான
...டைந்துள்ள இலங்
...டுபிடிக்கும் வகை
... ஆராய்ச்சி வகுக்
...ளது. கிருமிகள்,
... களைகள் ஆகிய
... கட்டுப்படுத்துவ
...த்தியடைந்துள்ள
... நுட்பங்களையும்.
...செய்கைக்குப்
...மான விவசாய
...ங்களையும் கண்டு
... ஆராய்ச்சியிலும
... செலுத்தப்பட்டுள்

...தாராளமான உத
... திட்டத்தின்படி
... செய்கைக்கு இர
...பசளை விநியோகித்

...கள் முதலானவற்றையும் இதர விவசாய உபகரணங்களையும் வழங்குதல்.

**சாதனைகள்**

விவசாய உற்பத்திப் பொருட்களை அதிகரித்தற்கான அரசாங்கத் திட்டங்கள் 1967-ம் ஆண்டு தீவிரமாக மேற்கொள்ளப்படும் தலைசிறந்த சாதனைகள் ஈட்டப்பட்டுள்ளன. கடந்த பெரும்போக காலம் [1966—67 பெரும்போகம்]. பல துறைகளிலும் மிகவும்வெற்றிகரமானதாகும். பல உற்பத்தி இலக்குகள் மீறப்பட்டன.

அதிகரித்தது. இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நெல் உற்பத்தி அதிகரித்ததை இப்புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இவ்வாண்டில்மேலும் 15 சதவிகித உற்பத்தி அதிகரிப்புக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நெல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டதற்குக்காரணம்கூடிய அளவு பசளை இடப்பட்டதாகும். பசளையை சேமித்து வைப்பதற்கான வசதிகள் கூடுதலாக செய்து கொடுக்கப் பட்டதுடன் பசளையும் பயன்படுத்தப் பட்டது, அத்தாட்சிப் படுத்தப்பட்ட உயர்ந்தரகவிதை நெல் வழங்கப்பட்ட தொகையும் அதிக விளைச்சலைத்தரும் எச் 4 இன நெல் மற்றும்கலப்பற்றஇன நெல் பயிரிட்ட பிரதேசங்களின் தொகையையும் எதிர்பார்த்த இலக்குகளை மீறிவிட்டன.

1967-ம் ஆண்டின் சிறுபோக காலத்துக்கு விவசாய அமைச்சின் நிறைவேற்றுத் திட்டம் 1,90,10,000 புசல்

## விவசாய கிட்டத்தில் புதிய நடவடிக்கைகள்

மொத்த நெல் விளைச்சல் இப்போக காலத்தின் குறியளவான 3,43 40 000 புசலையும் மீறி 3,49,44,969 புசலாக அதிகரித்தது. ஏக்கர் ஒன்றின் சராசரி விளைச்சலும் குறுகியளவான 40 புசலைமீறி 40.85 புசலாக நெல் உற்பத்தியை இலக்காகக்கொண்டுள்ளது. சரியான புள்ளிவிபரங்கள் இன்னும் கிடைக்காதபோதிலும் இக்குறிக்கோளை எய்த முடியுமென்பதில் விவசாய அமைச்சு நம்பிக்கைகொண்டுள்ளது.

...ால —
...(யோகத்தர்)

...களுக்கு உதவி
...ணிகளில் வாரக்
...மகள்பற்றிய சட்ட
...ம் கிர மங்களில்
...குழுக்களை ஸ்தா
...
...நாக்குக் கூட்டுற
...கள் வாயிலாக
...ரசாயனப்பொருட்
...இதர விவசாய உப
...ளையும் விநியோகித்
...
...பிகள் செம்மை
...ர்ச்செய்கை முறை
...ளவசதியளிக்கு
...விவசாயகடன்திட்
...இலகுவாக்குதல்.
...யையும் இதர விவ
...ற்பத்திப்பொருட்
...ாங்குவதற்கு உத்
... விலைகளும் இதர
...படுத்தலும் வசதிக
...ுதல்.
...பாசன, வாய்க்கால்
... உள்ள இடங்களில்
... விருத்திசெய்த
...லாத இடங்களில்
...களைச் செய்து
...லும்.
...கமுடியாத கார
...வ பயிர்களை இழ
...சாயிகளுக்கு அவ்
...த்துக்கு நஷ்ட ஈடு
...ப்படும் ஒரு பயிர்
...த் திட்டம்.
...ல் தற்சமயம்வெளி
... நாணயமாற்று
... இருந்தும் கூட
...ல அதிகரித்தற்கு
...கள் விவசாயரசா
...ருட்கள், பசளை

## "மாணவ ஆசிரியர் நியமனம்மூலம் பண்டிதர், புலவர்களுக்கு விமோசனம் அளியுங்கள்"

### தமிழ் எம். பி.க்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

"பண்டிதர், புலவர்களுக்கு மாணவ ஆசிரியர் நியமனங்கள் மூலமாவது விமோசனம் கிடைக்க வழி செய்ய வேண்டும்" என்று கதிரவேற்பிள்ளை கலாமன்றம் தமிழ் எம். பிக்களுக்கு அனுப்பிவைத்துள்ள மஜரொன்றில் கேட்டுக்கொண்டுள்ளது.

இம்மஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் தமிழைத் துறைபோகக் கற்றுப் பண்டிதர், புலவர் பட்டங்கள் பெற்று வேலையற்று இன்றுவரை இருக்கும் 50 அல்லது 60 இளம் உள்ளங்கள் வாடி வதங்குவதை அவர்கள் அறியாமல் இல்லை.

அவர்கள் சார்பில் அரசியல் கட்சி பேதமின்றி அவர்களுக்கு வேலை வழங்க தேசிய அரசாங்கம் தலைப்பட்டபோது தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்தது நடந்த உண்மை. திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ., பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ., திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. ஆகியோர் குறிப்பிடத்தக்க முயற்சி எடுத்துத் தோல்வி கண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்க்கல்வி வாழ்வறுக்கும் கல்வி என்ற நிலையை மாற்றித் தமிழ்க்கல்வி வாழ்வளிக்கும் கல்வி என்ற நிலைக்குக் கொண்டுவந்து தமிழ் கற்போர் உள்ளங்களில் ஓரளவு தெம்பு ஏற்பட இந்த மாணவ ஆசிரியர் நியமனங்களைப் பயன்படுத்த தமிழ் எம். பி.க்கள் தவறமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அண்மையில் நடந்த ஆசிரியர் இடமாற்றங்களில் பல பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் இடங்கள் நிரப்பப்படாமல். இருக்கின்றன அவர்களது இடங்களுக்கு பண்டிதர்களும் புலவர்களும் ஏற்றவர்களென்பதை யார்தான் மறுக்கமுடியும்.

பண்டிதர், புலவர், நியமனம் இனி இல்லையென்ற நிலையில் இந்தவழியிலாவது அவர்கள் விமோசனம்பெற வழி வகுக்கக்கூடாதா? தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனிப்பார்களா? (நி)

## ஒளி வழிபாடு

பொரளை, வெள்ளி

கொழும்பு அருளொளி நிலையம் 14-ம் ஆண்டு தீப தரிசன ஒளி வழிபாடு விழா நிலையக் காரியாலயத்தில் கொண்டாடப்பட்டது

முதலியார் திரு. குலசபாநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கு. குருசாமி வாழ்வில் ஒளி என்பது பற்றியும் திரு. கு. குப்புசாமி பிறவியின் பயன் என்பது பற்றியும் உரையாற்றினர்

ஒளி வழிபாட்டுடன் ஆரம்பமான இவ்விழா திருமதி சிவானந்தவல்லி வரதராசனது [illegible]யுடனும் [illegible]யோகப்பயிற்சி உறுப்பினரின் ஆசனப் பயிற்சி விளக்கங்களுடனும் முடிவடைந்தது.

## நாளை ஆரம்பமாகும் பொருட்காட்சி

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் அழகு மனைப் பொருட்காட்சி நாளை ஆரம்பமாகின்றது. கல்லூரிமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இப் பொருட் காட்சி தொடர்ந்து 20ம் திகதி வரை நடைபெறும்.

வெளிநாட்டுத்தூதராலயங்களின் கலை, கலாச்சாரகைப் பணிக் காட்சிகளும். விஞ்ஞானக் காட்சிகளும் இங்கு விசேஷமாக இடம் பெறுவதுடன் நுண்கலை, விஞ்ஞான புவியியல், மனையியல். கைப்பணி, ஓவியக் கண்காட்சிகளும் இங்கு இடம்பெறும்

3 நாட்களும் கலை நிகழ்ச்சிகள், நடனம், நாடகம், விநோத உடைப் போட்டி, சர்க்கஸ். மாய ஜால வித்தைகள் ஆகியனவும் இடம் பெறும்.

—செந்தூர்

## சுப்பிரமணியம் மீது உரிமை பிரச்னை

### இளம்வழுதி கிளப்பினார்

சென்னை, பெப். 16

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் மீதும், 'இந்து' பத்திரிகைமீதும் இன்று உரிமைப் பிரச்னையொன்றைக் கிளப்பினார் தி. மு. கழக உறுப்பினர் திரு. இளம் வழுதி.

ராஜ்ய கீழ் சட்டசபையில் ஜனவரி 23-ம் திகதி நிறைவேற்றியதீர்மானம் ஒன்று குறித்து திரு. சுப்பிரமணியம் கண்டித்துப் பேசியிருப்பதாகவும், அது இந்துப் பத்திரிகையில் வெளிவந்திருப்பதாகவும், இதுசபையை அவமதிப்பதாகவுமுள்ளதாக திரு. இளம்வழுதி சட்டசபையில் தெரிவித்தார்.

ராஜ்யகீழ்சட்டசபைஎதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் பேசுகையில், தீர்மானத்தை ஒரு மோசடி என்று குறிப்பிட்டால்தான் தவறு என்றும், அரசியல் மோசடி என்று குறிப்பிட்டிருப்பதில் எவ்வித தவறுமில்லையென்றும் கூறினர்.

இதுசம்பந்தமாகப் பரிசிலனை செய்வதாக சபாநாயகர் திரு சி. பா. ஆதித்தனார் கூறினர்.

## ஆளுக்கு ஒரு ருத்தல்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் முதல் ஆளுக்கு 1 ருத்தல் வீதம் செத்தல் மிளகாய் வழங்கப் படுகிறது. இருத்தல் ரூ 3-25க்கு வழங்கப்படும். இம் மிளகாயைப் பெறுவதற்கு மக்கள் நீண்ட கியூவில் நின்று பெற்றுக்கொள்கின்றனர்.

## சுருட்டுத் தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை சுருட்டு தொழிலாளர் சங்க கூட்டம், நாளை தாவடியிலுள்ள சங்க காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

[illegible] பிரச்னை [illegible] நிரப் பிரச்னை பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

## சர்வ சமய ஒருமை

கண்டியில் வருடந்தோறும் நடைபெறும் உலகப் பிரசித்திபெற்றபெரஹேரா விழாவை சீர்திருத்தி அதன் பழம் பெரும் சிறப்பையும் கொண்டாட்டத்தையும் புதுப்பிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் உள்நாட்டு மந்திரி திரு. விஜயானந்தா தஹநாயகா ஒரு விசாரணைச்சபையை நியமித்துள்ளார்.

இச்சபையில் சேவை புரிய ஒப்புக்கொண்ட திரு எஸ். பி. பெத்தவெல என்ற ஒரு கண்டியர் திரு. தஹநாயகாவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சில ருசிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்துசமயத்தவரைவிட இஸ்லாமியரும் இந்த பெரிய விழாவில் கலந்துகொண்டனர் என்பதைப் பலர் அறிய மாட்டார்கள் என்று திரு. பெத்தவல கூறுகிறார். பெரஹேர, ஊர்வலம் கண்டியிலுள்ள மீராமக்கம் பள்ளிவாசலை அணுகும்போது அங்குள்ள இஸலாமிய மதகுருமாரும் அதில் கலந்துகொள்வார்களாம். இடையில் ஆங்கில ஆட்சியாளர்கள் குறுக்கிட்டு, பிரித்தாளும் நோக்கத்துடன், இந்த வழக்கத்தை நிறுத்திவிட்டார்கள்.

கண்டி பெரஹேரா ஊர்வலத்தில் இன்றும் இந்து சமய சார்பான கதிர்காமத்

## நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

இந்த விழாவில் பௌத்தத்துக்கு மட்டுமல்ல, அக்காலத்தில், அதாவது கண்டி அரசன் இலங்கையைஆண்டு வந்த காலத்தில், கிறிஸ்தவர்கள் இந்நாட்டில் புகு முன்பு, இங்கு நிலவியஎல்லா சமயங்களுக்கும் இடம் அளிக்கப்பட்டதாம். கண்டி அரசன் ஒருவனே இவ்விதியை விதித்திருந்தானும்.

அவ்வரசன் யார் என்பதைப்பற்றி நாம் ஐயம் கொள்ளவேண்டியதில்லை. அவன்தான் கடைசி இலங்கை மன்னனாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் என்ற தமிழ் மன்னன், அவனுடைய காலத்தில்தான் இந்த 'ஏசால பெரஹேரா' விழா உருவானது. அக்காலத்தில் இலங்கையில் நிலவிய பௌத்தம், இஸ்லாமியம், இந்துசமயம் மூன்றிற்கும் ஏசால விழாவில் இடமளிக்கவேண்டுமென்று அவன் கட்டளையிட்டிருந்தான்.

தெய்வம், கண்ணகித் தெய்வம், நாகசுரக் கோஷ்டிகள் முதலியவற்றைக் காணலாம்.

கதிர்காமத்தில் இந்துக்களும் பௌத்தர்களும், ஒற்றுமையாக முருகனை வழிபடுமிடத்தில் இஸ்லாமியர்களுக்கும் இடமுண்டு.

நயினாதீவில் பௌத்தர்களும் இந்துக்களும் ஒன்றாக வழிபடுகிறனர்.

கொச்சிக்கடை அந்தோனியார் கோயிலில் கிறிஸ்தவர், இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள் எல்லோருமே வணங்குகிறார்கள்.

இலங்கைத்தீவில் இப்படி சர்வசமய ஒற்றுமை இருப்பது மிகவும் விரும்பத்தக்கது, பிறநாடுகளில் சமயத்தின்பேரால் சண்டைகள் நடக்க, இங்கே சமயத்தின் பேரில் சமரசம் நிறுவுவது பற்றி நாம் பெருமை கொள்ளலாமல்லவா?

## நெடுந்தீவில் பெற்றோல் ஆராய்ச்சி முடிந்தது

நெடுந்தீவு, வெள்ளி

கடந்த இருவாரங்களாக நெடுந்தீவில் பெற்றோல் ஆராய்ச்சியை நடாத்தி வந்த இலங்கை பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத்தார் தாங்கள் நெடுந்தீவில் நடாத்திய ஆராய்ச்சியில் 3 பிரிவுகளாக வேலை செய்தனர்.

ஆராய்ச்சியில் பிரான்சு தேச நிபுணர்களான திரு. கோட்டன், திரு. லாவியர், திரு. டிமெல்போஸ் ஆகியோர் அங்கம் வகித்தனர். இலங்கை பெற்றோலியம் கூட்டுஸ்தாபன அதிகாரிகளும் கலந்து ஆராய்ச்சி நடத்தினர்.

32 டைனமைற் வெடிகளைக் கடலிலும், தரையிலும் வைத்துப் பரிசீலனை செய்தபின்னர் தங்கள் ஆராய்ச்சியை முடித்துக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சகல ஆராய்ச்சிகளினதும் படங்கள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டன.

ஆராய்ச்சியின் பின்னர் இங்கு பெற்றோல் அறிகுறிக்கான சேதனப்பொருட்கள் படைபடையாக மிக ஆழத்தில் காணப்படுவதாகவும் இவற்றை பருத்தித்துறை யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் அதிகம் காணவில்லையென்றும் நெடுந்தீவுக்கு அடுத்தபடியாக மன்னாரில அதிகம் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இக்கோஷ்டிக்கு பிரான்சு தேசத்தைச் சேர்ந்த டைரக்டரான திரு ஏ பிறயோன் தலைமை தாங்கினார். நாளைக்கு அவர்கள் தங்கள் ஆராய்ச்சியை கிராஞ்சியில் ஆரம்பிப்பர் எனக் கூறப்படுகிறது.

அனலைதீவில்

## இலவச இராப் பாடசாலை

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவில் சமீபத்தில் இராப்பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளனர். அனலைதீவு வடக்கு 3 ம் வட்டாரத்தில் ஆரம்பித்த பாடசாலைக்கு திரு. க. ஐயம்பிள்ளை இடவசதியளித்துள்ளார். 40க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் ஆயுள்வேத வைத்தியர், திரு. சு. குமரலிங்கம் திரு. ஐ. கந்தசாமி முதலியோர் இவ்வுதவியை செய்து வருகின்றனர். பாடசாலை வளர்ச்சிக்கு பொதுநலன் கருதி உழைக்கும் முற்போக்கு சங்கங்களினதும் கிராமமுன்னேற்றச் சங்கங்களினதும், கிராமசபையினரினதும் உதவி நாடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## இடமாற்றம்

கொம்பனித்தெரு, வெள்ளி

உணவு விவசாய இலாகாவில் கடமையாற்றிய இளைய தம்பி கனகசபை உணவு விவசாய இலாகாவில் இருந்து உள்நாட்டு அமைச்சு காரியாலயத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

° ° °

யாழ்ப்பாணம் சனி

மன்னகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தலைமையசிரியாகக் கடமையாற்றிய திரு. த. ஆறுமுகம் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாசாலைக்கு சிரேஷ்ட உதவியாசிரியராக மாற்றப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "படத்துக்கு போகாதே; வேலைக்குப்போ"

## தாய் கண்டித்ததால் மகன் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

படத்துக்குப் போவதை விட்டு இனியாவது வேலைக்குப் போ எனத் தாய் கண்டித்ததால் மனமுடைந்த வாலிபர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இப்பரிதாப சம்பவம் மானிப்பாய்ப் பகுதியில் நடைபெற்றது.

மரணமான நாகமுத்து சிவஞானம் [21 வயது] என்ற வாலிபரின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினர். மரணமானவரின் தாயான லட்சுமி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

மரணமான எனது மகன் நச்சுத் தொழிலுக்குச் செல்பவர். ஆனல் அவர் வேலைக்குக் கிரமமாகச் செல்வதில்லை. தினமும் இரவு படத்துக்கு மட்டும் தவருது செல்வார். சம்பவம் நடப்பதற்கு முதல் நாள் இரவும் படத்துக்குச் சென்ருர். படத்துக்குப் போவதை விட்டு இனியாவது வேலைக்குச் செல் என்று அவரை நான் அடுத்த நாள் காலை கண்டித்தேன். உடனே தோட்டத்துக்குச் சென்ற அவர் பின்னர் வீட்டின்பின் பக்கமாக ஓடினுர். சந்தேகத்துடன் நான் அங்கு சென்றபோது அவர் நச்சுத்திராவகம் குடித்துக்கொண்டிருந்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கா. நி.)

## 1ம், 2ம் எதிரிகள் விடுதலை

### 3ம் எதிரி குற்றவாளி

வல்வெட்டித்துறை வெள்ளி

வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களான திரு. லயனல், திரு. அல்பேர்ட் ஆகிய இருவரையும் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 7ந் தேதி கடமை செய்யவிடாது தடுத்ததாகவும், தாக்கியதாகவும் அதே இடத்தைச் சேர்ந்த தங்கவேலாயுதம் சோமசுந்தரம் சண்முகம்பிள்ளை ஆகிய மூவர் மீதும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட், முதலாம் இரண்டாம் எதிரிகளைச் சுற்றவாளிகளாகக் கண்டு விடுதலைசெய்து மூன்றும் எதிரியான சண்முகம்பிள்ளை குற்றவாளியாகக் கண்டு நியாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு தீர்ப்பை வேறொரு திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## கைத்தொழிற் பேட்டை

வல்வெட்டித்துறை வெள்ளி

வட இலங்கைத் தனியார் ஸ்தாபனம் ஒன்றினல் முதன்முதலாகக் கைத்தொழிற்பேட்டை ஒன்று தொண்டமானறு செல்வச்சந்நிதிகோவிலுக்கு மேற்கே காங்கேசன்துறை வீதியில் அமைக்கப்படவிருக்கிறது.

வட இலங்கை முன்னேற்றச் சங்கத்தினல் நிறுவப்படும் இப்பேட்டையில் கப்பல் கட்டும் தொழில், நெசவுத் தொழில், இயந்திர மூலம் நெல் குற்றல், கடைச்சல் தொழில் முதலிய வேலைகள் நடைபெறவிருக்கிறது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**சனி 17-2-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 ஜதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — எம். ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதர்.

## இப்பொது பண்டகசாலையிலிருந்து

அச்சுவேலி, வெள்ளி

இதுவரை காலமும் பண்டகசாலையின்றி இயங்கிவந்த பத்தைமேனி கதிர்ப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது ஒரு பண்டகசாலையை ஆரம்பித்து, பங்கீட்டரிசி உட்பட மற்றும் பொருட்களை விநியோகித்து வருகிறது.

## தேசிய சுவீப் முடிவுகள்

பலாங்கொடை, வெள்ளி

நேற்று பலாங்கொடையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 181-வது சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

**1-வது பரிசு**

35 D 0885 ரூ 100.000

**2 வது பரிசு**

10 N 0165 ரூ 40,000

**3-வது பரிசு**

43 G 0647 ரூ. 10,000

தலா ரூ. 1396-80 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 06 M 0963 | 14 D 0676 |
| 45 O 0088 | 11 S 0008 |
| 49 A 0847 | 27 W 0178 |
| 37 M 0401 | 23 F 0940 |
| 5[illegible] O 0456 | 13 M 0396 |
| 01 M 0382 | 50 C 0516 |
| 05 L 0442 | 09 D 0546 |
| 28 S 0661 | 33 W 0344 |
| 27 N 0677 | 04 R 0444 |
| 01 U 0283 | 57 V 0783 |
| 26 P 0758 | 29 P 0719 |
| 06 N 0694 | 20 V 0613 |
| 25 H 0702 | 06 G 0458 |
| 54 P 0524 | 04 Q 0847 |
| 1 I 0299 | 13 Y 0963 |
| 14 X 0[illegible]55 | 18 S 0090 |
| 39 V 0885 | 07 Y 0477 |
| 55 T 0698 | 41 E 0960 |
| 18 V 0133 | 23 X 0614 |
| 07 N 0397 | 32 B 0847 |
| 58 J 0684 | 30 Y 0155 |
| 23 V 0076 | 20 O 0288 |
| 57 K 0121 | 57 F 0768 |
| 18 A 0877 | 09 R 0510 |
| 22 U 0805 | 03 T 0088 |
| 17 N 0309 | 09 A 0379 |
| 07 N 0935 | 01 B 0437 |
| 52 C 0931 | 23 H 0148 |
| 54 L 0626 | 25 D 0275 |
| 44 L 0878 | 50 F 0350 |
| 27 P 0240 | 35 H 0661 |
| 38 M 0064 | 12 T 0938 |
| 11 P 0697 | 06 D 0635 |
| 56 D 0282 | 04 J 0520 |
| 13 L 0171 | 11 X 0445 |
| 20 K 0856 | 21 P 0112 |
| 48 A 0485 | 49 M 0271 |
| 03 A 0975 | 49 U 0088 |
| 04 O 0635 | 18 M 0197 |
| 25 D 0017 | 46 H 0766 |
| 18 G 0620 | 51 O 0739 |
| 24 M 0610 | 08 Q 0117 |
| 16 F 0383 | 05 M 0425 |
| 46 K 0051 | 38 S 0662 |
| 06 V 0721 | 26 X 0403 |
| 52 L 0881 | 22 A 0573 |
| 53 H 0103 | 32 Q 0344 |
| 41 G 0693 | 24 F 0754 |
| 15 D 0863 | 08 Y 0450 |
| 47 U 0639 | 33 G 0147 |

இவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## தீர்மானம்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி லீவில் செல்லும்போது பதில் வைத்திய அதிகாரிஒருவரை அனுப்புமாறு சுகாதார இலாகா அதிகாரிகளையும் சுகாதார மந்திரியையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நெடுந்தீவு கிழக்கு [illegible] நிறைவேற்றப்பட்டது.

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

**வினுக்கள்:**

1. அவுஸ்திரேலியப் பிரதம மந்திரி யார்?
2. ஸெம்பியா [Zambia] வின் தலைநகரம் யாது?
3. பூமிக்கண்மையிலுள்ள பிரகாசமான கோள் எது?
4. இலங்கை எண்ணெய் கொழும்புக் கூட்டுத்தாபனத் தொழிற்சாலை எங்கமைந்துள்ளது?
5. பிரெடி வைற் [Freddie White] எவ் விளையாட்டுடன் தொடர்புகொண்டவர்?
6. நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்தவர் யார்?
7. மூதவைச் [செனற்] சபையின் உபதலைவர் யார்?
8. டைனமைட் [Dynamite]ஐக் கண்டுபிடித்தவர் யார்?
9. இலங்கை அரசவிமானப்படைத் தளபதி யார்?
10. உலகின் பெரிய [Largest] ஹொட்டல் எது?
11. அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட புயல் காற்று மழையினுல் முதலாவது கடுமையாக பாதிக்கப்பட்ட பெரும் பிரிவு [District] எது?
12. மெசப்பத்தோமியா [Mesopotomia] என அழைக்கப்படும் நாடு எது?
13. உலகின் அதி உயர்ந்த [Highest] சிலை எது?
14. மகாவம்சத்தை ஆங்கிலத்தில மொழிபெயர்த்தவர் யார்?
15. இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டதிகாரி யார்?

(விடைகள் 7-ம் பக்கம்)

# 'தென்னிலங்கை மக்களை நாம் பின்பற்ற வேண்டும்''

## யாழ். நாடக வட்டத்தின் அங்குரார்ப் பணத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

'தென்னிலங்கையிலுள்ள மக்கள் நாடக வளர்ச்சியில் அடைந்துள்ள முன்னேற்றத்தை தமிழ் மக்கள் பின்பற்றவேண்டும். இதனுல் தரமான பல தமிழ்நாடகங்களை இங்கு மேடையேற்ற முடியும்'.

இவ்வாறு யாழ். நாடக வட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் திரு. து. உருத்திரமூர்த்தி [மஹாகவி] குறிப்பிட்டார். செல்லிப்பளை மகாஜனக்கல்லூரி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. மஹாகவி மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ள தரமான நடிகர்களைத் தேர்ந்தெடுத்து நல்ல பல நாடகங்களைத் தயாரிப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும் தயாரிக்கப்படும் நாடகங்கள் குறுகிய எல்லைக்குள் நிற்காமல் பல கிராமங்களிலும் மேடையேறி நாடகக்கலையை வளர்க்க தமிழ் மக்கள் போதிய ஆதரவுவழங்க வேண்டும்.

நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. து. உருத்திரமூர்த்தியும் [மஹாகவி], செயலாளராக திரு. ச. திருநாவுக்கரசுவும், தெரியப்பட்டதுடன், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வி வேதவல்லி கந்தையா, திரு. கே. குகதாஸன், பொன். தெய்வேந்திரம், திரு. விசுவநாதஐயர், எஸ். எஸ். மணி ஆகியோரைக் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரியப்பட்டது. [கா. நி]

# "அ. ந. க. வின் படைப்புகள் வழிகாட்டியாக அமையும்'

யாழ்ப்பாணம் . சனி

'திரு. அ. ந. கந்தசாமியின் அகால மரணம் ஈழத்து இலக்கிய உலகுக்கு ஒரு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக இருப்பதோடு தமிழ் இலக்கிய உலகுக்கு பெரும் நஷ்டமாகும்' என்று கதிரவேற்பிள்ளை கலாமன்ற துணைச்செயலாளர் திரு. ஆ. தேவராசன் எழுத்தாளர் திரு. அ. ந. கந்தசாமியின் பிரிவு குறித்து அனுப்பிவைத்த அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் அச்செய்தியில் குடுப்பிட்டதாவது:-

'திரு. கந்தசாமி ஒரு சிறந்த கவிஞர், சிறந்த நாடகாசிரியர், புதிய உத்திகளைக் கையாளும் ஒப்பில்லாத சிருஷ்டி கர்த்தா எல்லாவற்றிற்கும் மேலாக தனித்தன்மை வாய்ந்த ஒரு இலக்கிய விமர்சகர்.

அவர் விமர்சனமே ஒரு தனி இலக்கியம் இலக்கிய விமர்சனத்துறையில் பல கண்ணேட்டங்களைக் கையாண்டவர்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத்தவர் செய்த பணியை மிகவும் போற்றியவர். அந்தப்பெருமை நிலைக்கப்பாடுபட்டவர்பாரதியின் ஞான குருவாக விளங்கிய யாழ்ப்பாணத்துச் சுவாமி பற்றிய பிரச்னையை 'ஸ்ரீலங்கா' மூலம் எழுப்பி அது மேலைப்புலோலி அருளம்பலம் அடிகள் என்பதை நிறுவத் துணை புரிந்தார்.

தமிழ் இலக்கிய உலகில் ஒரு தனியிடம் வகுத்துக்கொண்ட அவர் இலக்கியப் படைப்புகள் இலக்கிய அன்பர்களுக்கு வழிகாட்டியாக அமையும்- அந்த அளவில் அவர் அமரன் ஆகிவிட்டார். மறையவில்லை, மறையமாட்டார்.

# "முதலுதவி மனிதசிந்தனை ஓட்டத்தை மாற்றுகிறது"

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

''முதலுதவி என்பது மனிதவாழ்வுக்கு மிக அவசியமானது மட்டுமல்ல, பிறருக்கு உதவ வேண்டுமென்ற சிறந்த சிந்தனையோட்டத்தையும் மக்களிடையே தூண்டுகிறது. அவ்வித சிந்தனையோட்டம் மனிதாபிமான அடிப்படையில் அமைவதால், மனிதவாழ்வு சுமை குறைந்து சுபீட்ச வாழ்வாக விளங்கும்.''

இவ்வாறு அமெரிக்க சமாதானப்படையைச் சேர்ந்த திரு. எம். டெனிஸ், உரும்பராய் இந்துக்கல்லூரி விஞ்ஞான மாணவர் மன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

திரு. ஆர். பஞ்சலிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:

''முதலுதவி என்பதற்கு 75 வீதம் பொது அறிவும் 25 வீத நுட்பஅறிவும் மட்டுமே தேவையாகும். ஆபத்தைக் கண்டு பதருததன்மை இதற்கு முதல் அவசியம்'' திரு வி. லோகநாதன் நன்றி கூறினர்.

## நீச்சல் குளம்

அராலி, வெள்ளி

அராலியிலுள்ள ஆகாயக் குளத்தின் எஞ்சியுள்ள வேலையைச் செய்து முடிப்பதற்காக இவ்வாண்டும் ரூபா 5000 கமத்தொழில் பகுதியினர் ஒதுக்கியுள்ளதாக அறியப்படுகிறது. கடந்த ஆண்டும் ரூபா 5000 இதற்குச் செலவிடப்பட்டதாம்.

மழைக்காலத்தில் நீரைத் தேக்கி வைக்கப் பயன்படுத்தப்படுவதெனக் கூறப்படும் இக்குளம் பகிரங்க நீச்சல்குளமாகவும் பயன்படுத்தப்படுகிறதாம்.

## அணை கட்டப்படுகிறது

அராலி, சனி

அராலி கடல்நீர் ஊர்மனைக்குள் பரவி பெரியபரப்பு நிலத்தை உவர் நிலமாக்கி வருவதால் புன்னாலை சந்தியிலிருந்து கடலோரமாக வழுக்கையாறு வரையும் உயர்ந்த அணை கட்டப்படுகிறது கமத்தொழில் இலாகாவினரால் செய்யப்படும் இவ்வேலைக்கு ரூபா 14 000 அரசினரால் ஒதுக்கப்பட்டுள்ளதென கமத்தொழில் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. இரத்தினராசா அராலி தெற்கு கிழக்குபயிர் செய்கைக்குழு கூட்டத்தில் பேசுகையில தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய கல்லூரி—இ.போ.ச. கிரிக்கெட் மோதல்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மத்திய கல்லூரியின் இவ் வருடத்துக்கான கிரிக்கெட் பருவத்தின் முதலாவது போட்டி இ. போ. ச. கிரிக்கெட் கோஷ்டியுடன் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது, ஒருநாள் ஆட்டத்திற்கான இப்போட்டியில்யாழ். மத்திய கல்லூரி எதிர்க்கோஷ்டியிலும் பார்க்கத்திறமையுடன் ஆடி அதிக ரன்களைப் பெற்ற போதிலும் குறிப்பிட்டகால நேரத்துக்குள் போட்டி முடிவடையாததால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதல் இன்னிங்ஸ்ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடிய இ. போ. ச. கிரிக்கெட்கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 141ரன்களைப் பெற்றது. இதில் எம். டி. தம்பிராசா 29ஓட்டங்களையும், கே. டி. கணேசகுமார் 35 ரன்களையும், சி.ரி பேரின்பநாயகம் 34 ரன்களையும் கே. வடிவேலு 12ரன்களையும் பெற்றனர். ஏனையோர் 5க்கும் குறைவான ரன்களையும் இதில் இருவர் ஆளுக்கு ஒவ்வொரு ரன்களையும் இருவர் ரன்னுமின்றியும் ஆட்டத்தை இழந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் யாழ். மத்திய கல்லூரியின் பந்தெறிவீரர்களான கே. திருக்குமார் 4ரன்கள் நஷ்டத்திற்கு 6விக்கெட்டுகளையும், சாந்திசரன் 41ரன்கள் நஷ்டத்திற்கு 2விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

யாழ் மத்திய கல்லூரி தனது முதல் இனிங்ஸ்துடுப்படி ஆட்டத்தில் 7விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 250 ரன்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர். இதில் ஸ்ரீகுலேந்திரன் 22 ரன்களையும் ரி தயசிங்கம் 32ரன்களையும், வி. ரி, சுந்தரலிங்கம் 26 ரன்களையும், பாலேந்திரன் தனது விக்கெட்டை இழக்காமல்83 ரன்களையும். எம், ஜேக்குமார் 44 ரன்களையும் முறையேபெற்றனர்.

இ சந்தர்ப்பத்தில் இ. போ. ச. கோஷ்டியின் பந்தெறிவீரர்களான டி. கணேசகுமார் 74 ரன்கள் நஷ்டத்திற்கு 4 விக்கெட்டுகளையும், ரி. பேரின்பநாயகம் 41 ரன்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கெட்டையும், கே. பாக்கியராசா 13ரன்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் முறையே வீழ்த்தினர்.

இ. போ. ச, கோஷ்டி 2ம் இனிங்சில் துடுப்பெடுத்தாடி 4 விக்கெட்டுகளை இழந்திருந்தசமயம் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

[வி. நி.]


# தேசீய ரீதியில் நாடக போட்டி

குரும்பசிட்டி, வெள்ளி

குரும்பசிட்டி வளர்மதி சனசமூகநிலையத்தினர் அகில இலங்கை ரீதியில் மார்ச் மாதம் 20-ந் திகதி நாடகப் போட்டியொன்றை நடாத்தவிருக்கின்றனர். ஈழத்தில் உள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுமன்றங்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். 45 நிமிடங்களுக்கு மேற்படலாகாது. சமூக, புராண, சரித்திர நாடகங்கள் இப்போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படும்.

நாடகங்கள் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

போட்டியில் கலந்துகொள்ள அனுமதிவகப்படும் குழுக்கள் திரைகளை தவிர நாடகத்திற்குரிய உபகரணங்களைக் கொண்டுவர வேண்டும். பின்னணி வாத்தியங்கள் அனுமதிக்கப்படும். போட்டியில் வெற்றியீட்டும் நாடகக் கோஷ்டிகளுக்கு தங்கப்பதக்கம், வெள்ளிக் கிண்ணங்கள் பரிசுகளாக வழங்கப்படும். போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் சங்கங்கள் காரியதரிசி, வளர்மதி சனசமூக நிலையம் குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.



## புதிய சமாதான நீதவான்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியின் பதில் அதிபராகக் கடமையாற்றும் திரு. எஸ் கார்த்திகேசு யாழ்ப்பாணம் பகுதிக்கு புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகவும், உதவி அதிபராகவும் கடமையாற்றிய இவர் இவ் வருடம் முதல் பதில் அதிபராகக் கடமையாற்றுகின்றார்.

அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, இளவாலை சென்கென்றீஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் சிலகாலம் நல்லூர் கிராமசபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றினர். யாழ்ப்பாணப் பட்டின ஆசிரியர் சங்கத் தலைவராகக் கடமையாற்றும் இவர் தொடர்ந்து 14 ஆண்டுகளாக திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றுகின்ருர். [கா நி]

# தீவுப்பகுதியில் படகுசேவை திருப்தியாக இயங்குகிறது

அனலைதீவு, வெள்ளி

தீவுப்பகுதி மோட்டார் படகு சேவையில் மீண்டும் புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனல் எழுவைதீவு, அனலைதீவு, நயினதீவு பிரயாணிகள் சுலபமாக பிரயாணஞ் செய்யக் கூடியதாக உள்ளதாம்.

ஊர்காவற்றுறையிலிருந்து காலை 8-15 மணிக்கும், 11 மணிக்கும், மாலை 3 மணிக்கும், 4 மணிக்கும் மோட்டார் படகு புறப்பட்டு எழுவைதீவு, அனலைதீவு. நயினதீவுக்குச் செல்லுகின்றது. காலை 8-15க்குப் புறப்படும் மோட்டார் படகு தபால் பைகளுடன் புறப்படுவதால் இப்பகுதிகளில் தபால்கள் விரைவில் விநியோகம் செய்யப்படுகிறது.

அனலைதீவிலிருந்து காலை 7-30 மணிக்கும் 8 மணிக்கும், மாலை 12-30 மணிக்கும் 1-45 மணிக்கும் மோட்டார்ப்படகு ஊர்காவற்றுறைக்குப் புறப்படுகிறது. இப்பகுதி மக்களுக்குக் குறிப்பாக பிறவூர் ஆசிரியர்களுக்கு இச்சேவை தக்க பலனளிக்குமெனமென நம்பப்படுகிறது இதுவரை இங்கு நிலவிவந்த போக்குவரத்துச்சேவையைச சீர்திருத்தியமைத்த தீவுப்பகுதி மோட்டார்வள்ள ஐக்கிய சங்கத்தினருக்கும், தனிப்பட்ட மோட்டார் படகு சொந்தக்காரர்களுக்கும் அனலைதீவு பிரயாணிகள் சங்கம் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளது.

## வை. எம். சி. ஏ. வருடாந்த விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் இவ்வருடம் கொண்டாடப்படவிருக்கும் 25-வது வருடாந்த விழாவில், இளம்பெண்களும் கலந்துகொள்வதற்காக பல புதிய விளையாட்டுப்போட்டிகளை நடத்தமேற்படி விளையாட்டுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

பெண்களுக்கான சயிக் ஒட்டம், டெனிஸ் ஆட்டம், பாட்மின்ரன் ஆட்டம் ஒட்டப்பந்தயம், டேபிள் ரெனிஸ், சதுரங்க ஆட்டம் போன்ற விளையாட்டுக்கள் மார்ச் 8-ல் நடைபெறவிருக்கும் 25-வது ஆண்டு விழாவைச் சிறப்பிக்கவுள்ளன.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்கு செனட்டர் திரு. ரி. நீதிராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிருர். [வி. நி.]

## தைப்பூசம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டைமானறு செல்வச்சந்நிதி கோவிலில் தைப்பூசத் திருவிழாவையொட்டி விசேஷ ஆராதனை பூசைகள் நடைபெற்றன. முன்னைய வருடங்களை விட இவ் வருடம் ஏராளமான பக்தர்கள் சமுகமளித்திருந்தார்கள்.

அரசாங்க ஊழியர்

# 'நொக் அவுட்' போட்டிகள் ஆரம்பம்: முதல் போட்டியில் சமமுடிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ் மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவிலான அரசாங்க ஊழியர் 'நொக் அவுட்" உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ். மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையேயான முதலாவது ஆட்டத்தில் இரு கோஷ்டியினரும் சமபலத்துடன் மோதிய காரணத்தினுல் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் ரசிப்பாகக் காணப்பட்ட போதிலும் இடைவேளைக்கு முன் மாநகரசபைக் கோஷ்டியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. முன்னணி வீரர்களான சிதம்பரநாதன் குணசிங்கம் ஆகிய வீரர்கள் அபாரமாக ஆடி கோலடிக்கும் அருமையான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திய தன் பயனாக இவர்கள் ஆளுக்கு ஒவ்வொரு கோல்களை விளாசினர். எனினும் பொலிஸார் விட்டுக்கொடுக்காமல் ஆடினர்.

இடைவேளையின் போது மாநகரசபைக் கோஷ்டியினர் இரு கோல்கள் பெற்றிருந்ததக்கதாகப் பொலிஸார் ஒருகோல் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப் பின்னர் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. பொலிஸார் மேலும் வேகமாக முன்னேறி ஒரு கோலைப் பெற்றனர். இப்போட்டியில் இரு கோஷ்டியினரும் தலா 2—2 கோல்களைப்பெற்று ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தனர்.

போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தம் வகித்தார், வி. நி.

## மார். 19ல் முக்கிய போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி இவ் வருடத்துக்கான கிரிக்கெட் பருவகாலத்தில் மொத்தம் 8 கல்லூரிகளுடனான கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளுகிறது. கிரிக்கெட் ரசிகர்கள் யாவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் யாழ். மத்தியகல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயானகிரிக்கெட் மோதல் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் மார்ச் 19ல் நடைபெறவுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஏனைய கிரிக்கெட் போட்டிகளின் விபரம் பின்வருமாறு: இம் மாதம் 19ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திலும், 26ம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடனான போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும், மார்ச் 7ம் திகதி கண்டி சென். சில்வஸ்டருடனான போட்டி சென். ஜோன்ஸ் மைதானத்திலும், மார்ச் 12ல் சென். பற்றிக்ஸ் கல்லூரியுடனான போட்டி சென். பற்றிக்ஸ் மைதானத்திலும், 26ம் திகதி கொழும்பு புதாலத்தாக கல்லூரியுடனான போட்டி ... லும் நடைபெறவுள்ளன.

(வி. நி.)

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. செனற்றர் ஜோன் கிறே கோற்றன் [Senator John Grey Gorton]
2. லுசாக்கா [Lusaka],
3. சுக்கிரன் [Venus].
4. சீதுவ [Seeduwa].
5. ஹொக்கி [Hockey]
6. ஜேம்ஸ் வொற் [James Watt].
7. செனற்றர் எஸ். டி. எஸ். சோமரத்ன [Sen. S. D. S. Somaratne]
8. அல்ஃபிரட் பி நோபெல் [Alfred B Nobel].
9. ஏயர். வைஸ். மாஷல் றோகன் அமரசேகரா [Air Vice Marshal Rohan Amerasekara].
10. சிக்காக்கோவிலுள்ள கொன்ருட் ஹில்டன் [Conrad Hilton].
11. சிலாபப் பெரும் பிரிவு [Chilaw District].
12. இராக் [Irag].
13. சுதந்திரச் சிலை [Statue of Liberty].
14. ஜோஜ் ரேனர் [George Turnour].
15. திரு. வி. ஜே. எச். குணசேகரா [V. J. H. Gunasekara].

[அடுத்த மாதிரி வினவிடைகள் இம் மாதம் 24-ம் திகதி வெளிவரும்]


ராதா மணிமார்க்

**சந்தனுதித் தைலம்**

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை ஆதிவிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

58, கே. கே. எஸ். றேட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு. கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம்.பி.கள், அதிகாரிகளுக்கு காணி கிடையாது

## காணி குத்தகை சபை செய்துள்ள முடிவு

கொழும்பு, வியாழன்

விசேஷ காணி குத்தகை சபையிடம் இனிமேல் எம். பிக்கள், உயர்தர அரசாங்க ஊழியர்கள் அவர்களின் மனைவிமார் பிள்ளைகள் ஆகியவர்கள் காணிகள்பெற்றுக் கொள்ளமுடியாது. விவசாயாயத்துக்காக நடுத்தர குடும்பங்களுக்கும் விவசாயிகளுக்கும் மட்டுமே இச் சபை இனிமேல் காணிகள் வழங்கும்.

கடந்த காலத்தில் விவசாயத்துக்கென எம். பிக்கள் பலரும் அரசாங்க உயர்தர அதிகாரிகள் பலரும் காணிகள் பெற்று தரிசாகப் போட்டு வைத்திருப்பதாக செய்திகள் அடிபட்டன. தற்பொழுது பல எம். பிக்கள் தாங்கள் பெற்றகாணிகளை திருப்பிக் கொடுத்து விட்டார்களாம்.

# ரூ. 2 கோடி பெறுமதியான தங்கமும் விமானமும் பறிமுதல்

புதுடில்லி, பெப். 15

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் பாலம் விமான நிலையத்தில் தடுத்துநிறுத்தப்பட்ட பி. ஓ. எஸ். ஏ. விமானத்தையும் அதில் கைப்பற்றப்பட்ட 2 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்தையும் பறிமுதல் செய்யும்படி இந்தி சுங்க மற்றும் எக்சைஞ் கலக்டர் உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்தியாவின் சுங்க சட்டத்தை இந்த விமானக் கம்பனி பல தடவைகள் மீறி இருப்பதாகவும் தொடர்ந்து சட்டத்தைமீறுவதை சகிக்க முடியாதென்றும் அவர்தெரிவித்துள்ளார்.

ஏதோ உலோகம் என்ற போர்வையில் இந்த தங்கம் விமானத்தில் கடத்தப்பட்டதாம். ரூ. 5 லட்சம் அபராதம் செலுத்தும்படி விமானக்கம்பனிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விமானமும் தேவையென்றால் ரூ. 10 லட்சம் ரூபாய் செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

வல்வை இளைஞன் கொலை வழக்கு:

# 'இறந்தவர் கடைக்கு சிலநிமிட நேரம் முன்னதாக வந்திருந்தார்'

வல்வெட்டித்துறை, வியாழன்

வல்வெட்டித்துறை இளைஞன் ஆர் சிவஞானசுந்தரத்தின் கொலைவழக்கு இன்று பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில்விசாரணைசெய்யப்பட்டபோது நெல்லியடியைச் சேர்ந்த வியாபாரியான முத்தையா வல்லிபுரம் என்பவர் எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. ஜோர்ஜ் சந்திரப்பாவினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது கூறியதாவது:

நெல்லியடியில் எனக்கு ஒரு கடை இருக்கிறது. என்னுடைய கடையிலிருந்து வல்வெட்டித்துறை ஏறத்தாழ மூன்றரைமைல் தூரம் இருக்கும். இறந்தவரான சிவஞானசுந்தரத்தை எனக்குத் தெரியும். சம்பவம் நடப்பதற்கு இரண்டு வருடங்களுக்குமுன்பிருந்தே அவரைத்தெரியும். அவர் பீடி வியாபாரம் செய்கிறவர். அவரிடம் இருந்து நான் பீடிகள் வாங்கி வந்திருக்கிறேன். எங்கள் பகுதியில் சாய்ப்புச் சட்டம் இருந்து வருகிறது. அதன் காரணமாக வெள்ளிக்கிழமைகளில் கடை பூட்டப்பட்டிருக்கும். நான் மணிக்கூடு கட்டுவதில்லை. ஆனால் எனது கடையில் ஒரு சுவர்மணிகூடு உண்டு. சம்பவம் நடந்த தினத்தன்று இறந்தவர் கிட்டத்தட்ட இரவு 8 மணிக்கு ஐந்து பத்து நிமிட வித்தியாசம் இருக்க கடைக்கு வந்திருக்கலாம் நான் சிவஞானசுந்தரம் சூடுபட்டு இறந்துவிட்டார் என்று அடுத்த நாள் காலை 5 மணிக்கு வல்லிபுரக் கோவிலடியில் கேள்விப்பட்டேன்.

கொழும்பு கைரேகை நிபுணர் திரு. சிறிமானே, காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெகடர் திரு. எஸ். வி. மூர்த்தி பொலிஸ் உத்தியோகஸ்தர் திரு. கந்தையா, படப்பிடிப்பு நிபுணர் ஆகியோருக்கு சம்மன்ஸ் அனுப்புமாறும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டும் மேல் விசாரணையை இம்மாதம் 23-ம் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## வடபகுதியில் மலேரியா பரவுகிறது

புலோலி, வியாழன்

வடமராட்சிப் பகுதியில் மலேரியாஜுரம் தீவிரமாக பரவிவருகிறது.

முக்கியமாக கரவெட்டி வதிரி பொலிகண்டி ஆகிய பகுதிகளில் மலேரியா நோய் பரவி இருப்பதாக மலேரியா தடுப்பு பகுதியினர் தகவல் தந்துள்ளனர்.

இந்நோய் பீடித்துள்ளவர்களை மந்திகை அரசினர் வைத்திய சாலையிலும் யாழ் அரசினர் வைத்தியசாலையிலும் சேர்த்து சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

## பிரயாணிகள் மீது ரயில் ஏறியது

### 16 பேர் பலி 13 பேர் காயம்

புதுடில்லி, பெப். 15

பட்னாவுக்கருகில் லக்கிசாராய் என்ற இடத்தில் நேற்று ரயில் வண்டியொன்று பிரயாணிகள் மீது ஏறியதன் காரணமாக 16 பேர் பலியானார்கள், 13 பேர் காயமடைந்தார்கள்.

ரயிலுக்காக காத்திருந்த மக்கள் கூட்டமொன்றின் மீது வேறு ரயில் வந்து ஏறியதாம். மரணமானவர்களில் 7 பேர் பெண்களாம்.

## ஜே. ஆர். திரும்பினர்

கொழும்பு, வியாழன்

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று நண்பகல் 12-30மணியளவில் விமானத்தில் இரத்மலானை விமான நிலையம் வந்துசேர்ந்தார். புதுடில்லியில் நடந்த ஐ. நா.வின் 2-வது வர்த்தக அபிவிருத்தி மகாநாட்டில் இலங்கைதூதுகோஷ்டியின் தலைவராக கலந்துகொண்டுவிட்டு, இங்கு வந்து சேர்ந்ததும், தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸா, செனட் சபைத் தலைவர் ஏ. ரட்னநாயக்கா உட்பட பலபிரமுகர்கள் அவரை வரவேற்றனர்.

## பிரதமருக்கு யாழ்நாகவிகாரை தேரோ மகஜர்

நல்லூர், வெள்ளி

வடபகுதியிலுள்ள ஐந்து லட்சம் ஹரிஜனங்களில் மூன்று லட்சம் பேர் பௌத்த சமயத்தில் சேர்ந்து சிங்களம் படிக்க விருப்பம் கொண்டுள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள பிரதம விகாராதிபதி கடவத்த நந்தராம நாயக்க தேரே பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் தெரிவித்துள்ளார்,

இவர்களுக்கு சிங்களம் கற்பிப்பதற்காக சரவெட்டி அச்சுவேலி, பூநகரி, அல்வாய், புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளை அரசாங்கம் ஏற்று அங்கு சிங்களம் போதிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் இவர் தமது மகஜரில் பிரதமரைக் கேட்டுள்ளார்.

## கோதபயா கொலைவழக்கு

### 21-ல் விசாரணை

கொழும்பு, வியாழன்

சிறுவன் கிரம்பகந்தை கோதபயா கொலை வழக்கு கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஏச். என். ஜி பெர்னான்டோ முன்னிலையில் இம்மாதம் 21-ந் தேதிஆரம்பமாகிறது.

1966-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் கோதபயாஎன்ற 10 வயதுச்சிறுவனைக்கொலை செய்ததாகவும், கொலை செய்ய முயன்றதாகவும் சிறுவனின் தகப்பனான கிரம்பகந்தைமீதும், அவரது சினேகிதி என்று கூறப்படும் இளம்பெண் போலின்குரூஸ் மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இறந்த சிறுவனின் சடலம் தெஹிவளை கிணறொன்றிலிருந்து பொலிஸார் கண்டெடுத்தது தெரிந்ததே.

## அடிக்கடி மின் விளக்கு அணைகிறது

புலோலி, வியாழன்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அடிக்கடி இரவு நேரங்களில் மின் விளக்குகள் அணைந்து இருள் மயமாக காட்சி அளிக்கிறது.

இதனால் இங்கு கடமையாற்றும் ஊழியர்களும். இங்கு சிகிச்சை பெறும் நோயாளர்களும் பெரும கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சை பெறவந்து இருக்கும்கர்ப்பிணிகள் மின் விளக்குகள் சிலசமயங்களில் அணைந்து விடுவதால் வெளி இடங்களில் இருந்து விளக்குகளின் உதவியை நாடவேண்டியிருக்கிறதாக புகார் கூறுகிறார்கள்,

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# கல்முனை செய்திகடிதம்

— நமது நிருபர் திருமதி செல்வம் தருமராஜா —

இம்மாதம்18ந்திகதிநடைபெற இருக்கும் கல்முனை இடைத்தேர்தல் சம்பந்தமான வேலைகளை செய்து முடிப்பதில் அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரி துரித கவனம் எடுத்து வருகிறார். வாக்காளர்களின் பெயரும், இலக்கமும் வாக்களிப்பு நிலையமும் அடங்கிய அட்டைகள் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களாகப் பாவிக்கப்படும் பாடசாலைகள் அன்றைய தினமும், அதற்கு முந்திய தினமும் மூடப்பட்டிருக்கும் என அறியவருகிறது. தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலயங்களில் கடமையாற்றுவதற்கு மட்டக்களப்பு கச்சேரியில் உள்ள உத்தியோகத்தர்களும் விசேசமாக அழைக்கப் பட இருப்பதாக தெரிய வருகிறது.

### பொலிசார் உஷார்

கல்முனைப் பொலிஸ் நிலயத்தவர்கள் இரவு பகலாக ரோந்து சுற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். கல்முனையிலும் அதையடுத்த கிராமங்களிலும் எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் பொலிசாரின் எண்ணிக்கை கூட்டப்பட்டுள்ளது. வெளி மாகாணங்களில் இருந்து பொலிசார் கோஷ்டி கோஷ்டியாக வந்த வண்ணமாக இருக்கின்றனர்.

### அக்கரைப்பற்றில் அமைதி

கடந்த இரண்டு வாரங்களாகஅக்கரைப்பற்றில்நடைபெற்று வந்த கலவரம் கட்டுக்கடங்கி விட்டதாகத் தெரிய வருகிறது. தற்சமயம் பூரண அமைதி நிலவுவதாகவும் அறியவருகிறது. அங்கும் பொலிசார் இரவு பகலாக காவல் புரிவதில் ஈடுபட்டுள்ளனர். இரு சமூகத்தவர்களின் தலைவர்களும் பல சமாதானக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இரு சமூகத்தவரையும் சமாதானப் படுத்துவதில் நிந்தவூர் பாராளுமன்றப் பிரதிநிதி ஜனாப். எம் எம் முஸ்தபா அவர்கள் பெருமுயற்சி எடுத்து வருவதாகப் பேசிக் கொள்ளப்படுகிறது.

### முக்கிய சந்திகளில் பலத்த பொலிஸ் காவல்

கல்முனை நகரத்தின் முக்கிய சந்திகளில் விசேசமாக பொலிசார் காவல் புரிந்து வருகின்றனர். குறிப்பாக கல்முனை, அக்கரைப்பற்றுப் பாதையில் காரைதீவுச் சந்தியில் பலத்த பொலிஸ்காவல் போடப்பட்டுள்ளது.

### மலேரியா பரவுகிறது

இதுவரை கல்முனையில் மலேரியாவால் பீடிக்கப்பட்டவர்கள் தொகை சுமார் 10என மதிப்பிடப் பட்டுள்ளது. கல்முனையிலே உள்ள பிரபல்யமான பாடசாலை விடுதி ஒன்றிலே மாணவன் ஒருவன்மலேரியாவால்பீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்று வட்டாரங்களுக்கு மலேரியாத் தடுப்பு மருந்து தெளிப்பதில் மலேரியாத் தடை இயக்கத்தினர் ஈடுபட்டுள்ளனர். கல்முனையின் ஏனையகிராமங்களிலும் மலேரியா பரவிவருவதாகத்தெரியவருகிறது.

### நாளை..............

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஜனப் பதியுதின் முகமதும், பேசியுள்ளார்கள்.

திரு. மாணிக்கத்தை ஆதரித்து, விடுதலைஇயக்கத்தலைவர் திரு. வி. சுந்தரலிங்கமும், இலங்கை திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் திரு இளஞ்செழியனும், பல கூட்டங்களில பேசியுள்ளனர். ஜனப் காரியப்பரை ஆதரித்தும் பலர் பிரசாரம் செய்துள்ளனர்.

தேர்தல் முடிவுகள் நாளை நள்ளிரவுக்குப்பின் அறிவிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## கெயிஸாங் தளம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்களைத் தெரிவித்தார்

### அமெரிக்கா மறுப்பு

தென் வியட்னாமில் கெய்-ஸாங் தளத்தை காப்பாற்றுவதற்கு அமெரிக்கா அணு ஆயுதத்தை உபயோகிப்பதற்கு ஆலோசனை செய்வதாக வெளிவந்துள்ள ஒரு செய்தியை அமெரிக்க பாதுகாப்பு மந்திரி மறுத்தார். அமெரிக்கா வரம்புக்குட்பட்ட ஒரு போரையே நடத்துவதாக அவர் தெரிவித்தார்.

## நெசவு........

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையில் கொண்டு வருமாறு இப்பகுதி அதிகாரிகளை வேண்டியுள்ளேன். இப்பகுதியில் பனங்கட்டி வெல்லம், தயிர் போன்ற பொருள்கள் உற்பத்திசெய்யும் நிலையங்களை அமைக்கப்போவதாக அறிகிறேன். இவை மிகமிக நல்ல திட்டமாகும்.

பனங்கட்டி, வெல்லம் போன்றவற்றைப் பாவித்தால் வெள்ளைச் சீனிக்காக நாம் வெளிநாட்டுக்குஅனுப்பும்பலகோடிரூபாய்கள்மிஞ்சும். அதைக்கொண்டு பல ஆக்கவேலைகள் செய்யலாம்.''

அவரைத் தொடர்ந்து பேசிய பட்டிருப்பு எம். பி. திரு சி. மூ. இராசமாணிக்கம் கூறியதாவது:

''இந்த நாட்டில், நாம் பொருளாதார சுதந்திரம் பெருதவரையில் நாம் பெற்ற சுதந்திரம் நிரந்தரமானதாகாது. ஆகவே இந்த நாட்டிலுள்ள சகல பிரஜைகளும் இந்த நாட்டின் அபிவிருத்தியில் முன்னின்று உழைக்கவேண்டிய காலமிது. இந்த நாட்டில் தற்சமயம் இயங்கும் 1000 நெசவாலைகள் மூலம் ஓரளவு உற்பத்தி ஏற்பட்டிருந்த போதிலும் போதிய உற்பத்தியை ஏற்படுத்த நீங்கள் பாடுபட வேண்டும்.''

## தேசிய சின்னமும் தி. மு. க. அரசும்

சென்னை, பெப். 15

தேசிய சின்னம், தேசிய கீதம், தேசிய கொடி ஆகியவற்றை தி. மு. க. அரசாங்கம் அவமதிப்பதாக எழுப்பப்படும் குற்றச்சாட்டுகள் தவறானவையென்று தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று சட்டசபை கூட்டத்தில் கூறினார்.

## இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

சங்கானை, வெள்ளி

சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகஇருந்த இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவிற்கும் யாழ் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரியாகஇருந்த இன்ஸ்பெக்டர் திரு எஸ் ரி. மெண்டிஸ்சங்கானை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியாகவும் இம்மாதம் 15 ம்திகதி தொடக்கம் மாற்றலாகியுள்ளனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org